தனிச்சிங்களக் காசோலையைத் திருப்பி அனுப்பிய பெண் மணிக்கு பலன் கிடைத்தது

Registered as a News paper in Ceylon விலைசதம் 15

★ ★

ஈழநாடு சந்தா
திடப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU
National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 11
இதழ்: 89
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் சித்திரை 29 ஸபர் 23 ஞாயிற்றுக்கிழமை [11-5-69]

யாழ். நகர பஸ் நிலையம் மீண்டும் இடம்மாறும்?

ஸ்டான்லி வீதிக்கருகில் புதிய நிலையம் அமையலாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண நகரபஸ் நிலையம் மீண்டும் புதிய இடத்துக்கு விரைவில் மாறவிருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப் படுகிறது.

யாழ்ப்பாணம் வண்ணங்குளத்துக்கு அருகே ஸ்டான்லிவீதிக்கும் மின்சார நிலைய வீதிக்குமிடையில் வெறுமனே கிடக்கும் சுமார் இரண்டு ஏக்கர் நிலையத்தில் புதிய பஸ் நிலையம் அமைக்கப்படவிருப்பதாகவும் இது பற்றிய பூர்வாங்கவேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. விசேஷ ஆணையாளர்களின் நிர்வாகத்தில் இந்த இடத்தில்பஸ்நிலையம் அமைப்பதுபற்றி முன்னர் எடுக்கப்பட்ட முயற்சிகள் கிளப்பியஆட்சேபம் காரணமாக கைவிடப்பட்டது.

'தேசிய அரசாங்கமே உணவுற்பத்திக்கு காரணம்'

பிரதமர் பெருமிதம்

கம்பஹா, சனி

'நாடு சுதந்திரமடைந்து 21 வருடங்களாகிவிட்டன. ஆனால் இன்னமும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தப்படவில்லை. சுயதேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எங்கள் தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே உணவுற்பத்திப் பெருக்கம் ஆரம்பிக்கப்பட்டது.'

இவ்வாறு பிரதமர் டட்லி சேனநாயக்கா மபிமா வித்தியாதீப பிரிவேனா நூல் நிலையத்துக்கு அடிக்கல் நாட்டி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாடு சுதந்திரமடைந்த நாள் தொடக்கம் உணவுதான் பொருளாதாரத்தை பாதித்தது. 4 வருடங்களுக்கு முன்னர் தேசிய அரசாங்கம் பதவியேற்குவரை ஒற்றுமை நாட்டில் நிலைநாட்டப்படவில்லை.

தேசிய ஒற்றுமை உணவு உற்பத்திப் பெருக்கம் ஆகிய எங்களது இரு நோக்கங்களையும் நிறைவேற்ற மக்கள் உதவுகிறார்கள். உணவு உற்பத்தி நாட்டின் தேவையை மட்டுமின்றி ஒற்றுமையையும் உண்டு பண்ணியுள்ளது. பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக கல்வி கற்பதை நோக்கும்போது மகிழ்ச்சியாகவுள்ளது. இவர்கள் வருங்காலத்தில் ஒரே குடும்பத்தினராகச் செயலாற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

குடியுரிமைப்பதிவு பற்றி கிளிநொச்சியில் விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கை குடியுரிமை பதிவு செய்வதற்கு கிளிநொச்சியில் வாழும் இந்திய குடியுரிமைக்காரருக்கு கிளிநொச்சியிலேயே விசாரணை செய்வதற்கான ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கையின் மற்றும் பகுதிகளில் கச்சேரிகளில் தான் இந்த விசாரணை நடைபெறுவது வழமை. [illegible] கிளிநொச்சியிலிருந்து 40 மைல்களுக்கு அப்பால்உள்ள கச்சேரிக்கு ஏழைமக்கள், செலவு செய்து போவது கஷ்டமாதலால், கிளிநொச்சியிலேயே [illegible] நடத்தப்பட்டது. [illegible] எம். பி. பண்டிதர் க. பொ. ரத்தினம் கேட்டதை பாணம் கச்சேரிக்கு விசாரணை நடத்த அழைக்கப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சியிலிருந்து 40 மைல்களுக்கு அப்பால்உள்ள கச்சேரிக்கு ஏழைமக்கள், செலவு செய்து போவது கஷ்டமாதலால், கிளிநொச்சியிலேயே விசாரணை நடத்தப்பட்டது. [illegible] எம். பி. பண்டிதர் க. பொ. ரத்தினம் கேட்டதை

அரசாங்க செலவில் அடக்கம்

வல்வெட்டித்துறை, சனி

தொண்டமானாறு செல்வச்சந்நிதி வாகனசாலை மடத்தில் நீராவியடியைச் சேர்ந்த செல்லப்பா என்னும் வயோதிபர் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

மரண விசாரணையின் போது கிராமசேவகர் திரு. வி. ஜெயவீரசிங்கம் சாட்சிகளை ஆஜர் செய்தபோது மரணவிசாரணை அதிகாரி திரு. சி. தாமோதரம்பிள்ளை விசாரணையின் பின்னர் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

இறந்தவரின் சடலத்தை எவரும் பொறுப்பேற்க முன்வராமையால் அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

.....

யாழ்ப்பாணம், ஞாயிறு

தனிச்சிங்களத்தில் கிடைத்த மூவாயிரம் ரூபாய் காசோலையை திருப்பி அனுப்பிய பெண்மணிக்கு தமிழையும் சேர்த்து எழுதிய காசோலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

காரைநகரைச் சேர்ந்த பெண்மணிக்கு தனிச்சிங்களத்தில் காசோலை அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

1958-ம் ஆண்டு தமிழ் மொழி விசேஷ சட்டத்தின் படியும், 760-ம் சுற்றறிக்கையின்படியும்காசோலையை அப்பெண்மணி திருப்பி அனுப்பி வைத்தாராம்.

குறிப்பிட்ட காசோலையில் தமிழிலும் எழுதப்பட்டுமீண்டும் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பஸ் ஊழியர் தகராறு; பாடசாலை மாணவர் தவிப்பு

யாழ்ப்பாணம், சனி

பஸ் ஊழியர்கள் இருவருக்கு நேற்றுக் காலை கொடிகாமத்தில் ஏற்பட்ட வாக்குவாதத்தினால் பாடசாலை சேவை பஸ் சுமார் அரை மணி நேரம் தாமதித்து யாழ்ப்பாணம் வந்ததாம்.

கொடிகாமத்தில் பாடசாலை சேவை பஸ்ஸில் பிரயாணம் செய்த இரு மாணவர்களை பஸ் ஓடிக் கொண்டிருந்தபோது பஸ் ஊழியர் வெளியில் தள்ள முயற்சித்ததாகவும் அப்பொழுது கடமையில் செல்லாத மற்றொரு பஸ் ஊழியர் அதனை கண்டித்ததாகவும் இதனைத் தொடர்ந்து சுமார் அரை மணி நேரம் இரு பஸ் ஊழியர்களும் வாக்குவாதப்பட்டதாகவும் கூறப்படுகிறது

நேற்று சாவகச்சேரிக்கு 7-45க்கு வரவேண்டிய பாடசாலை சேவை பஸ் 8-25 மணிக்கே வந்ததாகவும் இதனால் பல பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகவும் வழக்கமாக சேவை செய்யும் மற்றொரு பஸ்ஸும் நேற்றுச் சேவை செய்யவில்லையென்றும், தென் யாழ்ப்பாண பஸ் பிரயாணிகள் சங்க உபதலைவர் திரு. ஏ. கந்தையா தெரிவித்தார்.

கொடிகாமத்திற்கும் சாவகச்சேரிக்குமிடையில் பாடசாலை பஸ்சேவை ஒன்றை உடனடியாக ஆரம்பித்தால் பிரயாணிகளின் நெருக்கடியை குறைக்கலாமென்றும் சந்தை நாட்களில் காலையும், மாலையும் கொடிகாமத்திற்கும் சாவகச்சேரிக்குமிடையில ஒருகுறுகிய தூர சேவையை ஆரம்பிக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு அனுமதி கிடைக்குமா?

நல்லூர், ஞாயிறு

சீனசார்பு கம்யூனிஸ் கட்சியினரால் இம்மாதம் 15-ந் தேதி சுன்னாகத்தில் நடாத்தப்படவிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

சிலதினங்களுக்கு முன்னர் சுன்னாகம் பஸ் நிலையத்தில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து ஊர்வலத்திற்கு அநுமதி வழங்குவதுபற்றி பொலிஸார் மிகவும் நுணுக்கமாக ஆலோசனை செய்து வருவதாக பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டால், அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய நிலைமை உருவாகலாம் என்று பொலிஸ் வட்டாரங்கள் கருதுகின்றன'

யாழ். மாதிரி சந்தை

கட்டட ஒப்பந்தத்தை தலையிட்டு நிறுத்துக

மாநகரசபை அங்கத்தவர்கள் அவசர தந்தி

நல்லூர், ஞாயிறு

இம்மாதம் 10-ந் திகதி கைச்சாத்தாதகவிருக்கும் யாழ்ப்பாண மாதிரிச்சந்தை கட்டுவதற்கான கேள்விப் பத்திரஒப்பந்தத்தைநிறுத்த உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரை அவசரத் தந்திமூலம் யாழ். மாநகரசபை அங்கத்தவர்கள் 10 பேர் கேட்டுள்ளனர்.

அனுபவமில்லாதவராக இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

திருவாளர்கள் ஏ. ஜி. ராஜசூரியர், எம். எஸ். பேரின்பநாயகம், ஏ. ரி. துரையப்பா, தம்பு கந்தையா, எம். மார்க்கண்டு, ஏ. விசுவநாதன், கே. வி. தெய்வேந்திரம், என். நடராஜா, ஜனாப் சி. எஸ். ஏ. காதர், ஜனாப் எம். சி. பசீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீலியத்துக்கு அடிக்கல் நாட்டி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

நாடு சுதந்திரமடைந்த நாள் தொடக்கம் உணவு உற்பத்திக்கு கவனம் செலுத்தியிருந்தால் நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்திருக்கலாம். 21 வருடங்களும் நாடு பல்வேறு சமூகங்களாகவும் சமயப்பிரிவுகளாகவும், அரசியல் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவினருக்குமிடையே பொறாமை நிலவியது. இது

நோக்கும்போது மகிழ்ச்சியாகவுள்ளது. இவர்கள் வருங்காலத்தில் ஒரே குடும்பத்தினராகச் செயலாற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மாணவி பலி

கோட்டை, சனி

கடையில் சாமான்கள் வாங்கிக்கொண்டு வீடுதிரும்பிய 11 வயது மாணவி துப்பாக்கிக் குண்டுக்கு நேற்று பலியானாள். இச்சம்பவம், வட்டுவத்தேகம கல்கிரியாவ என்ற இடத்தில் நடந்தது. மல்லிகா என்ற இச்சிறுமி ஸ்தலத்திலேயே மரணமானார்.

'முழு ஜனநாயக அமைப்பில் அடுத்த தேர்தல் நடக்கும்'

டட்லி அறிவிப்பு

கொழும்பு, சனி

அடுத்த பொதுத்தேர்தல் முழு ஜனநாயக அமைப்பில் அமைந்ததாக இருக்குமென பிரதமர் டட்லிசேனநாயகா ஐக்கியதேசியக்கட்சி செயற்கமிட்டியிடம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் விஷயத்தில் ஐ. தே. கட்சி அதிகாரங்களைப் பரவலாக்கி கிளைகளுக்கும் கூடிய முக்கியத்துவம் அளிக்குமெனவும் அவர் கூறியுள்ளார்.

தேர்தல் பிரசாரஇலக்கத்துக்கு முன்னோடியாக மாதிரித்தேர்தல்இயக்கம்ஒன்றை யு. என். பி. நடத்தப்போவதாகவும் அவர் அறிவித்தார்.

கோவிந்தசாமியை காமராஜ் பார்த்தார்

தமிழக விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமியின் உடல்நிலை நேற்று மீண்டும் கடுமையானதாக சுகாதார அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தெரிவித்தார்.

திரு. கோவிந்தசாமிக்கு அடிவயிற்றில் வீக்கம்கண்டதாகவும், சிகிச்சையின் பின் திருப்திகரமாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

மருத்துவமனையில் இருக்கும் அமைச்சரை திரு. கு. காமராஜ் சென்று பார்த்தார்.

நொச்சியிலிருந்து 10 மைல்களுக்கு அப்பால்உள்ள கச்சேரிக்கு ஏழைமக்கள், செலவு செய்துபோவது கஷ்டமாதலால், கிளிநொச்சியிலேயேஇவ்விசாரணையை நடாத்தும்படி, கிளிநொச்சி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் கேட்டதை தொடர்ந்து, கிளிநொச்சியில் விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாள் கொலை வழக்கு:

அடையாள அணிவகுப்பில் சந்தேகம் ஊர்ஜிதம்

மட்டுவில், சனி

எழுதுமட்டுவாள் கொலை வழக்கு சம்பந்தமாக இன்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சாட்சிஅடையாளம் காட்டினர்.

கடந்த ஏப்ரல் மாதம் 15-ம் திகதி இரவு சாவகச்சேரியில் இரண்டாவது ஆட்டம் படம் பார்த்து விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்த எழுதுமட்டுவாள் வாசியான கந்தையா சரவணமுத்து என்ற வாலிபர் குத்திக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர், நேற்று முன்தினம் சந்தேகத்தின்பேரில் மூவரைக் கைது செய்து காவலில் வைத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து இன்று, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில ஒரு அடையாள அணிவகுப்பு நடைபெற்றது. இந்த அணிவகுப்பில சாட்சியளித்தமாணவன் வயிரமுத்து இலங்கையர் என்பவரை அடையாளம் காட்டினர்.

சந்தேக நபர்களை நிமாண்டிலவைக்க உத்தரவிட்ட நீதிபதி மேல விசாரணையை இம்மாதம் 18-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ஜனரிலை எதிரியின் உறவினர் சந்தித்தாராம்

வழக்கு ஜூலை 27க்கு ஒத்திவைப்பு

மட்டுவில், சனி

வழக்கொன்று விசாரணையிலிருக்கும்போது ஜனரிதிரு. சன்ஸ்லோ என்பவரை எதிரியின் உறவினர் ஒருவர் சந்தித்ததாகக் கூறிதாக்கல செய்யப்பட்ட வழக்கொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஜனப் இஸ்மாயில் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

சண்முகம் அரியராசா என்பவர் மீதான வழக்கொன்று, யாழ்ப்பாணம் உயர்நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் விசாரணையிலிருக்கும் காலப்பகுதியிலேயே இச்சம்பவம் நடந்ததாம்.

வழக்கின் முக்கிய சாட்சிகள் இருவர் வராததைக் தொடர்ந்து வழக்கை ஜூலை மாதம் 27-ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

குற்றத்தடுப்பு மசோதாவுக்கு செனட்டர் நடராசா எதிர்ப்பு

கொழும்பு, சனி

'உலகின் பல நாடுகளில் மரணதண்டனையே நிறுத்தப்பட்டுவரும் இந் நாளில் சாதாரண ஒரு ஏழையைக் குடிவெறியில் நின்றமைக்காக இவ்விதமாகத் தண்டிப்பது அநீதியாகும்'

இவ்வாறு செனட்சபை இன்று கூடியபோது நீதி அமைச்சர் திரு. ஏ. எல். விஜயமானே சமர்ப்பித்த குற்றத்தடுப்பு சட்ட திருத்தமசோதாவை எதிர்த்துப்பேசிய செனட்டர் திரு. எஸ். நடராஜா கூறினர்.

குடிபோதையில பொது இடங்களில் நின்று பொது மக்களுக்கு இடைஞ்சல்செய்பவர்களை கடுமையாகத்தண்டிப்பதற்காகவே இம் மசோதா சமர்ப்பிக்கப்பட்டது. இக்குற்றத்திற்கு ஒரு மாத சாதாரண சிறை அல்லது 100 ரூபா அபராதம் என்று இருந்த தண்டனையை 3மாத கடுழியம் அல்லது 500 ரூபா அபராதம்என்று அதிகரிக்க இம் மசோதா வழிசெய்யும்.

தொடர்ந்து பேசிய திரு. நடராசா 'ரயில்களில மது பான விற்பனையையும், சாராயக் கடைகளையும் அனுமதித்துள்ள அரசாங்கம், மது போதையில நின்றவருக்கு இப்படியான தண்டனையை விதிக்கக்கூடாது' என்று கூறினர்.

இம்மசோதாவை எதிர்த்து திரு. ஏ. ஆர். எம். அமீமும் பேசினர்.

மறைந்த ஜனதிபதிக்கு

செனட்சபையில் அஞ்சலி

கொழும்பு, சனி

மறைந்த இந்திய ஜனதிபதி டாக்டர் சாகிர் ஹுசெயினுக்கு செனட்சபையில் இன்று அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

செனட்டர் திரு. ரத்னயக்கா சமர்ப்பித்த இந்த அனுதாபப் பிரேரணையை திரு. திருச்செல்வம், திரு. யேசுதாசன், திரு. ஏ. பி. ஜயசூரியா, திரு. ஏ. எல். விஜயமானே ஆகியோர் ஆதரித்துப் பேசினர்.

ஜனஸாஎடுக்கும் விஷயத்தில் முஸ்லிம்களுக்கு சலுகை

யாழ்ப்பாணம், ஞாயிறு

முஸ்லிம்களுக்குள் ஒரு மரணம் சம்பவித்தால் டாக்டரின் அல்லது கிராமசேவகரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் ஜனஸாவை உடனடியாக எடுக்க அரசாங்க அதிபர் அனுமதி வழங்கியுள்ளார். தற்பொழுதுள்ள இறப்பு பிறப்பு சம்பந்தமான நிலைமைகளை மேலிடத்திற்கு அறிவித்து அங்கிருந்து பதில் கிடைக்கும் வரை இது நடைமுறையில் இருக்கும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எப். சி. பீற்றஸ் கூட்டிய மகாநாட்டில் யாழ். முஸ்லிம்கள் சார்பில் மாநகரசபை உறுப்பினர் ஜனப் எம். சி. பஸிர் தலைமையில் அல்ஹாஜ் என். எம். முகமது மிராமுகதீன் ஆலிம், முஸ்லிம் விவாகப் பதிவுகாரர்களான ஹதீப், எஸ். நெய்னா முகமது லெப்பை, ஹதீப், எம். எம். அப்துல்லா லெப்பை ஆகியோர் கலந்துகொண்டனர். இம்மகாநாட்டில பிரதம பதிவுகாரர், பொது ஜன தொடர்பு உத்தியோகத்தர் மாநகரசபை உறுப்பினர் திரு. ஏ. விஸ்வநாதனும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் முஸ்லிம்களுக்குள் இறப்பு, பிறப்பு பதிவுகாரர் இல்லாததால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களை அரசாங்க அதிபரிடம் இவர்கள் விபரமாகக் கூறினர்கள். இக்கஷ்டங்களை நீக்க இயன்ற உதவி செய்வதாக அரசாங்க அதிபர் வாக்குறுதியளித்தார்.

முஸ்லிம்களுக்குள் ஒரு மரணம் சம்பவித்தால் டாக்டர் அல்லது கிராமசேவகரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் ஜனஸாவை உடனடியாக எடுக்க அரசாங்க அதிபர் அனுமதி வழங்கியுள்ளார். தற்பொழுது இறந்து 5 நாளைக்குள் தற்போதுள்ள பதிவுகாரரிடம் பதிந்துவிடவேண்டுமென்றும் தெரிவித்தார்.

யாழ். முஸ்லிம்களுக்குள் இறப்பு, பிறப்பு பதிவுகாரர் ஒருவரை நியமிப்பது சம்பந்தமாக உள்நாடு அமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா, தொழில் மந்திரி ஜனப் எம். ஏச் முகமது ஆகியோருக்கு தான் அனுப்பிய கடிதங்களை மாநகரசபை உறுப்பினர் ஜனப் எம். ஜி. பஸிர் அரசாங்க அதிபரிடம் காட்டி இதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

லொறிக்குப் பலி

நல்லூர், ஞாயிறு

ஆறுவயதுச் சிறுவன் லொறியொன்றுக்குப் பலியானான். இந்தப் பரிதாப சம்பவம் யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடியில் நேற்றுக் காலை நடைபெற்றது.

ஆரியகுளத்தடியைச் சேர்ந்த அன்ரன் லோறன்ஸ் என்ற சிறுவனே மரணமான சிறுவனாவான். மண்டை சிதறிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட இச்சிறுவன் அங்கு மரணமானான்.

இதுசம்பந்தமாக தெல்லிப்பழையைச் சேர்ந்த சுப்பிரமணியம்செல்வரத்தினம் என்ற லொறிச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

தொழில் நுட்ப கல்லூரிக்கு வயதுகட்டுப்பாட்டை நீக்கவும்

கல்வி மந்திரிக்கு ஜி. ஜி. கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் தேறுதவர்களையும் வேறு தொழிற் கல்வி கற்க வாய்ப்பில்லாதவர்களையும் 'தொழில் நுட்பக்கல்லூரியில் சேருவதற்கு விண்ணப்பிக்க அனுமதிக்க வேண்டும்.

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலைக்கு, யாழ்ப்பாணம் எம். பி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எழுதியுள்ளகடிதமொன்றில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

ஏப்ரல் 18-ந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் இம்முறை கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்கும் முறையில் மாற்றம் செய்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரே தடவையில் ஜீ. எல். ஈ. சாதாரணப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்து அவற்றில் 3 பாடங்களில் விசேஷ சித்திபெற்ற 16 வயதுக்கும் 18 வயதுக்குமுட்பட்ட மாணவர்களே இத்தொழில் நுட்பக் கல்லூரியில் விண்ணப்பிக்கலாம் என அவற்றில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வயதுக் கட்டுப்பாட்டால் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் தேறுதவர்களும் வேலையற்ற மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதுசம்பந்தமாகப் பலர் என்னைச் சந்தித்து முறையிட்டுள்ளார்கள். எனவே 18 வயதுக்கு மேற்பட்டவர்களாவிடுந்தாலும் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சையில் தேறுதவர்களையும் வேறு தொழிற் கல்வி கற்க வாய்ப்பில்லாதிருப்பவர்களையும் இந்தத் தொழில் நுட்பக்கல்லூரியில் சேருவதற்கு விண்ணப்பிக்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தவயதுக்கட்டுப்பாட்டை இத்தெழிற் கல்வியைக்கற்கவிரும்பும் மாணவர்கள் கற்பதற்கு உதவுவதற்கு நீக்குவது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கையெடுக்குமாறு கோரியே நான் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன்.

(1-ம் பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவிளம்பரம்

தேவை

அரிசி மில்லில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர் தேவை. திறமைக்கேற்ற சம்பளம், 'போனர்ஸ்'' வழங்கப்படும். தொழிலாளர் சேமநிதியும் செலுத்தப்படும். மாப்பியன் மில், மானிப்பாய். 1106

விற்பனைக்கு

கார்:
EN 5000 தொடர்பிலக்கமுள்ள மொரிஸ் மைனர் கார் நல்ல நிலைமையில், என்ஜினும், கியர்பொக்ஸும் புனரமைப்பு செய்யப்பட்டு விற்பனைக்குண்டு. 5-7, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1104

15 ''ஹோஸ்பவர்'' சக்தியுள்ள பார்ட்டுபிஸ்டன் சிலேஸ் பீற்றஸ்டன் ஓயில் என்ஜின் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. மாப்பியன் மில், சுதுமலை. 1107

கல்வி

அனுபவமிக்க பெண்பட்டதாரிகளால் நடத்தப்படும் தனிமகளிர் கல்லூரி. காலை. மாலை வகுப்புகள் ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை விஞ்ஞானம், சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம். தாமதமின்றி விண்ணப்பிக்கவும். யூனைட்டெட் மகளிர் கல்லூரி, 107 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1109

தவறிவிட்டது

மூக்குக்கண்ணாடி
7-5-69 காலை 8 மணியளவில் ஊர்காவற்றுறை நோக்கி புளியங்கூடல் ஊடாகச்சென்ற பஸ்ஸிலோ, வேலணை மகா கணபதிப்பிள்ளையார் கோயிலிலோ. கண்டெடுத்தவர்கள் என்னிடமோ, அல்லது 'ஈழநாடு' காரியாலயத்திலோ ஒப்படைத்தால் சன்மானம்வழங்கப்படும். மு. குமாரசாமிப்பிள்ளை, 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1110

மெய்வல்லுனர் போட்டி

கோப்பாய், சனி

கோப்பாய் அரசாங்க மகளிர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை வருடாந்த மெய்வல்லுனர் போட்டி இம்மாதம் 12-ம்திகதி கழகவிளையாட்டு முன்றலில் மாலை 3 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்

ஏல விற்பனை

வலி - கிழக்கு
பல நோ. கூ. ச. சமாசம்
நீர்வேலி

வருகிற வியாழக்கிழமை 15-5-69 முற்பகல் 10-00 மணியளவில் மேற்படி சமாஜக் மந்தோரில் பின்வரும் பொருட்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இவைகளைக் கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம்.

1. சாக்குகள் 784
2. லொறி டயர் (7 50X20) 16
3. இரூசு லொறிறிம் 2
4. போத்தல் 40
5. மற்றும் கழிவுபொருட்களும் விற்பனை செய்யப்படும்.

க. வீ. கனகசபாபதி,
தலைவர்.

10-5-69. 1568

பொலிஸ்கோஷ்டி தோல்வி

அல்லைப்பிட்டி, சனி

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரி ஜனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட கரபந்தாட்ட கிளித்தட்டுச் சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு விழாவில் வருடம்தோறும் நடாத்தப்பட்டு வரும் செற்றப் முறையிலான கரபந்தாட்டப்போட்டியில் அரியாலை விளையாட்டுக்கழகக் கோஷ்டியினரும், யாழ்ப்பாணம்பொலிஸ்விளையாட்டுக் கோஷ்டியினரும் மோதிக்கொண்ட போட்டியில் 3-2 புள்ளிகளைப் பெற்று அரியாலை விளையாட்டுக்கழகம் யாழ். பொலிஸ் கோஷ்டியினரை தோற்கடித்தது.

சைவசமயக் கருத்தரங்கு

நுவரெலியா, சனி

நுவரெலியா சைவசமயக் கருத்தரங்கு அமைப்புக்குழுவினால்ஒழுங்குசெய்யப்பட்ட சைவசமயக் கருத்தரங்கு நுவரெலியா அரச சவேரியார் கல்லூரியில் இம்மாதம் 16-ம்திகதி நடைபெறவிருக்கிறது.

இ. தொ. கா. நிதிச் செயலாளர் திரு. எம். கே. விஜயசுந்தரம் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் கண்டி நாவலப்பிட்டி ஆகியவற்றின் வட்டாரக் கல்வி அதிகாரிகள், விவேகானந்த

பருத்தித்துறை பிரிவு விளையாட்டுபோட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, சனி

பருத்தித்துறைப் பிரிவு விளையாட்டுப்போட்டி காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப்போட்டிவிபரம் வருமாறு:-

வல்வெட்டித்துறையுனைட்டெட் கழகத்திற்கும் பொலிஸ் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கபந்தாட்டப் போட்டியில் மூன்று விளையாட்டுக்களிலும் முறையே 15-5,15-13 15-8 புள்ளிகளை போட்டு யூனைடெட் கழகம் வெற்றியீட்டியது. இப் போட்டிக்கு திரு. ஏ. நேசதுரை மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

0 0

கபாடி போட்டி

பருத்தித்துறை கழகத்திற்கும் இன்பருட்டி கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கபாடி போட்டியில் பருத்தித்துறை கழகம் 2 போட்டிகளிலும் முறையே 11:6 11:8 புள்ளிகளை பெற்று வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு திரு. எஸ். கதிர்காமத்தம்பி மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

0 0

வலைப்பந்தாட்டம்

வடமராட்சித் தெரிவுகுழுவுக்கும் யாழ்ப்பாணம் தெரிவுகுழுவுக்கும்இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் வடமராட்சித் தெரிவுக்குழு 14;2 புள்ளிகள் போட்டு வெற்றியீட்டியுள்ளது.

பருத்தித்துறை உயர்தர பெண் பாடசாலையில் நடைபெற்ற இப் போட்டிக்கு திருமதி யேசுதாசன் செல்வி முத்து ஆடியோர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்கள்.

இப்போட்டிகள் யாவற்றுக்கும் விளையாட்டு அதிகாரிகள் திரு கார்த்திகேசு திரு எஸ். கதிர்காமத்தம்பி ஆகியோர் பொறுப்பாளராக இருந்தனர்.

நவரத்தினம் வெற்றிக்கேடயம் கைப்பற்றினர்

அல்லைப்பிட்டி, சனி

தீவுப்பகுதி எம்.பி. திரு. வ. நவரத்தினம் வெற்றிக் கேடயத்திற்காக ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினரால் வருடந்தோறும்நடாத்தப்பட்டுவரும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் தம்பாட்டி விளையாட்டுக்கழகத்தினரும் கரம்பன் விளையாட்டுக் கழகத்தினரும் மோதிக் கொண்ட விறுவிறுப்பான போட்டியில் 13-7 புள்ளிகளைப் பெற்று கரம்பன் கோஷ்டியினரை தம்பாட்டிக் கோஷ்டியினர் தோற்டித்து நவரத்தினம் வெற்றிக் கேடயத்தைக் கைப்பற்றினர்.

வேலை அனுபவ தினம்

சுழிபுரம், சனி

''கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தமது வேலை அனுபவங்களைத் தமக்குக் கீழே கல்வி கற்கும் மாணவர்களுக்கு அனுபவ ரீதியாகப் போதிக்கும் போதே உண்மையான பயனைப் பெற்றுக்கொள்ளவும் கண்டுகொள்ளவும் முடியும். வழிகாட்டிகளாக அமையும் ஆசிரியர்கள் கற்ற கல்வியைச் சமூகத் தொண்டாகக் கருதிப் பயன்படுத்த வேண்டும். வேலை அனுபவங்கள் எல்லாவற்றையும் நன்கு அறியும்போதே ஒருவன் முழு மனிதனாகின்றான்'' இவ்வாறு கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியர்களின் வேலை அனுபவ தினத்தையொட்டிக் கலாசாலைக் கொடியை ஏற்றி வைத்துப் பேசிய கலாசாலை அதிபர் திரு. எஸ். விசுவலிங்கம் குறிப்பிட்டார்.

[illegible]ழ்-இலக்கிய வட்ட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

[illegible] தமிழ்-இலக்கிய வட்டத்தின் [illegible] வருமாறு:

தலைவர் கலிங்ஞர் திரு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய பலன்

சௌமிய வருடம்
11-5-69
ஞாயிற்றுக்கிழமை
சித்திரை 29-ந் திகதி

திதி- தசமி பகல் 2-02 மேல் ஏகாதசி.

நட்சத்திரம்- பூரட்டாதி இரவு 1-04 மேல் உத்தரட்டாதி.

'தமிழர் சிங்களவர் சமத்துவமாக வாழ்வதையே விரும்புகிறோம்'

பருத்தித்துறையில் உதவி அமைச்சர்

வல்வெட்டித்துறை, சனி

''தமிழரும் சிங்களவரும் இந்நாட்டு மக்கள் அவர்கள் எப்பொழுதும் சமத்துவமாக வாழ்வதையே நாம் விரும்புகிறோம். அதனால் தான் 1965ம் ஆண்டு நமது பிரதமர் தலைமையில்தமிழர்களையும்சேர்த்து அரசாங்கத்தைஅமைத்தோம்'' என்று தேசிய விளையாட்டு உதவி அமைச்சர் திரு டி.பி வெலகெதெர எம்.பி, பருத்தித்துறை காரியாதிகாரி பிரிவு விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். உதவி அமைச்சர் சிறிது நேரம் தமிழிலும் பேசினார்.

பருத்தித்துறை உயர்தர பெண்பாடசாலையில் யாழ்ப்பாணம் மேலதிக அரசாங்க உதவி அதிபர் திரு ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது திரு வெலகெதெர தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

''நமது அரசாங்கம் விளையாட்டுத்துறைகள் மூலம் நமது பிள்ளைகளின் உடல்களைக் கவனிக்கவேண்டும் எனக் கருதி இந்நாடு பூராவும் விளையாட்டுப் போட்டிக்கு முதலிடம் அளித்து வருகிறது. அதற்கென ஒரு விளையாட்டு அமைச்சையும் ஏற்படுத்தியுள்ளது. இங்கு நடைபெற்ற மூன்று விளையாட்டு நிகழ்ச்சிகளில் முக்கியமாக கபாடி விளையட்டை இந்நாட்டில் எல்லாவிடங்களிலும் நடைபெறுத ஒரு விளையாட்டாகையால் எல்லாவிடங்களிலும் பரவச் செய்ய வேண்டும். 1958 ம் ஆண்டில் இந்நாட்டு தமிழ் மக்களுக்கு சில இன்னல் ஏற்பட்டன. அதையிட்டு நாம் மிகவும் துன்பப்பட்டோம். நாம் ஒரு நாட்டு மக்கள் எனக்கருதி ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதையே விரும்புகின்றோம்.

உபசபாநாயகர் திரு. எம் சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:- இவ்விளையாட்டுப் போட்டிகள்மூலம் ஈழநாட்டுமக்கள் திடகாத்திர காரர்களாக விளங்க வேண்டும் என்பதற்காகவே தான் தேசிய அரசாங்கம் 1966ம் ஆண்டு இதற்கென ஒரு அமைச்சை உண்டாக்கியது. விளையாட்டுப் போட்டிகளில் ஒரு பகுதியினர் வெற்றி பெறுவ

உடல் நலத்தின் மூலம் ஒற்றுமையைக் காண வேண்டுமானால் கீழ்தரமான அரசியல் விளையாட்டை விடுத்து மேல்த்தரமானஇதுபோன்ற விளையாட்டைக் கற்றுக் கொள்ள வேண்டும், நாம் அடிமைத்தனமானசமத்துவ வாழ்க்கை வாழ விரும்பாமல் சுபீட்சமான வாழ்க்கை வாழ்வதையே விரும்புகிறோம். தமிழ் மக்கள் மீது அன்புவைத்து இருக்கும் நமது உதவி அமைச்சர் போன்ற தலைவர்கள்தான் நமக்கு வேண்டும். பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராசாவும் பேசினார்.

கடைசியில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. வெலகெதெர பரிசில்கள் வழங்கினார்.

மீண்டும் குழப்பம்

சுழிபுரம், சனி

கடந்த சில மாதங்களாக மிகவும் ஒழுங்காக நடைபெற்று வந்த 782ம் இலக்க இ.போ,ச. பஸ் சேவை இம்மாதம் முதல் தினமும் காலை நேரத்தில் ஒழுங்கற்ற முறையில் நடைபெற்று வருகின்றது. இதனால் அரசாங்க உத்தியோகஸ்தாகள் வியாபாரிகள் மற்றும் பிரயாணிகள் பலத்த கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றனர். பிரயாணிகள் மேலும் கஷ்டம் அடையாமல்சேவையை திறம்பட செய்ய இ.போ.ச முகாமையாளர்கள் முன்வர வேண்டும் எனக் கோரும் ஓர்மகஜரை சுழிபுரம்கிராம சபைப் பகுதி பஸ் பிரயாணிகள் சங்கத்தினர் அனுப்பி வைத்துள்ளனர்.

இன்று மட்டும்
மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
அக்கா நகோ
(சிங்களம்)

ராஜா 118வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

நடுபபு மருந்து

சுழிபுரம், சனி

சுழிபுரம் கிராமசபை பிரிவிலுள்ள சகல குழந்தைகளுக்கும் தடுப்புமருந்து ஏற்ற ஓர்விரிவான திட்டத்தை அமுல் செய்து வருகின்றனர் சுகாதாரப்பகுதியினர். நோய்பரவும் அறிகுறிகள் காணப்படுவதாலேயே இவ் நடவடிக்கையாகும்

தோட்டப் பிரச்னை

கண்டி, சனி

கொத்மலையைச் சேர்ந்த கற்றப்போல தோட்டப் பிரச்னைசம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் இ. தொ. கா. தலைவர் எஸ் தொண்டமான், கண்டி மாநில தொழில் உதவி அதிகாரி திரு. பி. என். பழனிச்சாமி, நாவலப்பிட்டி மாவட்டப் பிரதிநிதி திரு. மைக்கல் ஜோசப் ஆகியார் கலந்து கொண்டனர். கேசவன்என்ற ஊமைப் பையனுக்கு தற்காலிகமாக ஆறுமாத சேவைப் பயிற்சி கொடுக்க தோட்ட நிர்வாகம் இணங்கியது.

''ஜப்பான் வளர்ச்சிக்கு நாட்டுப்பற்றே காரணம்''

அங்கு சென்றுவந்த பௌத்த குரு கூறுகிறார்

கோட்டை, சனி

'ஜப்பானியர் ஒவ்வொருவரும் நல்ல நாட்டுப்பற்றுள்ளவர்கள். இந்த நாட்டுப்பற்று காரணமாக ஜப்பான் வளர்ச்சியடைந்துள்ளது. ஒவ்வொரு ஜப்பானியரும் தனித்தனியே மேற்கொள்ளும் தொழில் காரணமாகவே நாடு முன்னேற்றமடைந்துள்ளது.'

ஜப்பான் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய சஞ்சிமடத்தைச் சேர்ந்தவரும் இந்தியாவின் பிரதம பௌத்த குருவுமாகிய வண. கெதிகால பன்திலதேரோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜப்பானில் சஞ்சிதூபத்தின் வடிவில் நிறுவப்பட்ட டகோபா திறப்புவிழாவில் பங்குபற்றுவதற்கு இவரை ஜப்பானிய பௌத்தர்கள் அழைத்திருந்தனர்.

அவர் மேலும் ஜப்பான் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

''காரியங்களைச் சரியாகவும் நேர்மையாகவும் செய்யும் இயல்புள்ளவர்கள். தங்கள் தொழிலிலேயேகூடிய கவனமுடையவர்களாக விருக்கும் இவர்கள் ஏமாற்று வேலைகளிலோ அல்லது தீய செயல்களிலோ ஈடுபடுவதில்லை. இலங்கையில்காணப்படுவதுபோல் வீதியிலே வீணாக நேரத்தைப்போக்குபவர்களை அங்கு காணவியலாது இவர்களைவிட இரந்துண்பவர்களையும் ஜப்பானில் காணமுடியாது. குடிகாரர்கள் கண்டபடி பிதற்றிக்கொண்டு வீதிகளில் தள்ளாடித்திரிவதில்லை. ஒவ்வொரு ஜப்பானியரும் சட்டத்தின்படி ஒழுகுபவராகவும் விருந்தோம்பும் மனப்பான்மையுள்ளவராகவும் காணப்படுவதோடு இலங்கையிடம் விசேஷமதிப்புள்ளவராகவும் உளர்.

உலகில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக இன்று ஜப்பான் உள்ளது. இது நாமும் நமது நாட்டை முன்னேற்றுவதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். உலகநாடுகள் யாவற்றுக்கும் ஜப்பான் முன்னோடியாகவுள்ளது எனில் மிகையாகாது.

ஜப்பான் பிரயாணத்தின் போது இவர் தாய்லாந்து, மலேஷியா, ஹாங்கொங் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்திருந்தார்.

இணுவில்
ஸ்ரீ காளிங்கன்
தினசரி: 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30மணி
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ராணி
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி

ளிர் ஆசிரிய பயிற்சிக்கலா சாலை வருடாந்த மெய்வல் லுனர் போட்டி இம்மாதம் 12-ம்திகதி கழகவிளையாட்டு முன்றலில் மாலை 3 மணிக்கு நடைபெறும். பிரதம விருந் தினராக பதில் கல்வி மகா திபதி திரு. டி. எம் ஹெட் டியாராச்சி கலந்துகொண்டு பரிசில்கள் வழங்குவார்,

ளாளர் திரு. எம். கே. விஜய சுந்தரம் தலைமையில் நடை பெறும் இக்கருத்தரங்கில் கண்டி நாவலப்பிட்டி ஆகிய வற்றின் வட்டாரக் கல்வி அதிகாரிகள், விவேகானந்த சபை போஷகர், தலைவர், உபதலைவர், செயலாளர் உட்பட பலர் பங்குபற்று வர்.

'ஈழநாடு'
10-வது ஆண்டு நிறைவு விழா

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி கீழே குறிப்பிடப்படும் விபரத்தின் பிர காரம் ஒரு கட்டுரைப் போட்டி நடைபெறும்.

3 பிரிவுகள் சிரேஷ்ட பிரிவு 1-6-69-ல் 19 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு
மத்திய பிரிவு 1-6-69-ல் 14—19 வய திற்கு உட்பட்டவர்களுக்கு
கனிஷ்ட பிரிவு 1-6-69-ல் 14 வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு

கட்டுரைக்கான விடயங்கள்:

1. காலத்தின் கண்ணாடி
2. காந்தியும் பத்திரிகையும்
3. தேசிய ஒற்றுமை

கட்டுரைகள் கோடிட்ட சாதாரண. பரீட்சைக் குரிய விடைத்தாளில் ஒருபக்கத்தில் மாத்திரம் சிரேஷ்ட பிரிவு 1500 சொற்களுக்கு மேற்படாம லும், மத்தியபிரிவு 1000 சொற்களுக்கு மேற்ப டாமலும், கனிஷ்ட பிரிவு 700 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி, 'ஈழநாடு, த. பெ. இல 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 20-5-69-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய தாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறை யின் இடதுபக்க மேல் மூலையில் 10-வது ஆண்டு நிறைவு விழா கட்டுரைப் போட்டி என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனுப்பப்படும் ஒவ்வொரு கட்டுரையுடனும் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள கூப்பன் ஒவ்வொன்று சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

மத்திய, கனிஷ்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் கட்டுரைகளைத் தாங்கள் பயிலும் கல்லூரி அதிபர் மூலம் அனுப்புதல் வேண்டும்.

இக்கட்டுரை சம்பந்தமான பரிசு முதலிய விப ரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

'ஈழநாடு'
கட்டுரைப் போட்டி
கட்டுரை தலைப்பு : .....
பெயர் : .....
விலாசம் : .....
பிரிவு: .....

திதி- தசமி பகல் 2-02 மேல் ஏகாதசி.

நட்சத்திரம்- பூரட் டாதி இரவு 1-04 மேல் உத்தரட்டாதி.

ராகுகாலம்- 4-24—5-54.

சுபநேரம்- 8-54—10-24.

இன்று பிறந்தவர் களுக்கு— புதுத்தொழில் நலன் தரும். புண் ணிய விருப்பால் கண்ணியம் சேரும். உயர் கல்வி. உயர்ச்சி உண்டு. கன்னிப்பெண்கள் எண் ணக் கவலை களிப்பைத் தரும். உத்தியோகத்தர் களுக்கு உயர்வு உண்டு. உடல்பிணி நீங்கும் நல் லாண்டாகும்.

மேஷம்- பேச்சில் வெற்றி, நலன் தரும் வாழ்வு.

ரிஷபம்- ஆசாரக் குறைவு, அமைதிக்கு பங் கம்.

மிதுனம்- சுற்றம்வாழ்த் தும் சுவைதடும் நிகழ்ச்சி.

கடகம்- பாக்கிய விருத்தி, பணிவில் நாட் டம்.

சிம்மம்- ஆயுதபயம், அவசரம்வேண்டாம்.

கன்னி- இனிதான வாழ்வு, இல்லறமேன்மை.

துலாம்- வஞ்சகர் திட் டம், வாழ்வில் அசதி.

விருச்சிகம்- இன்னல் விலகும், இறைஅருள் உண்டு.

தனுசு- அறிவே துணை, அடக்கமே நன்று.

மகரம்- உயர்ந்த நோக்கு ஊதியம் பெரு கும்.

கும்பம்- கனல் வீசும் பார்வை, கவனித்து நட.

மீனம்- சால் நடை நஷ் டம், காசும் விரயம்.

- சோதிடகலாநிதி -
திருமலைவேலுப்பிள்ளை

வட்ட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம். ஞாயிறு யாழ். இலக்கியவட்டத் தின் புதிய நிர்வாகிகள் விப ரம் பின்வருமாறு.

தலைவர் கவிஞர் திரு வி. கந்தவனம், உபதலைவர்கள் திரு. மு. க. சுப்பிரமணியம் செங்கை ஆழியான் இணைச் செயலாளர்கள்: யாழ்வா ணன், காரை செ சுந்தரம் பிள்ளை. பொருளாளர்: எஸ். செல்லத் துரை, செயற்குழு உறுப்பி னர்: சசிபாரதி, வி. குமாரசாமி, வி. ஐயாத்துரை, எம். பி. ஜேகப், ஏ. ரி. பொன்னுத் துரை, செம்பியன் செல்வன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 படப்பாட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 பாட்டு, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன் 61 மீ.

மாலை 4-30 செய்திச்சுருக் கம், 4-35 மெல்லிசை, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக் கள், 5-15 மாணவர் நிகழ்ச்சி, 5-45 படத்தி லிருந்து.

இரவு 6-15 வீணையும், புல்லாங்குழலிசையும், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய் திச்சுருக்கம், 7-03 கர் னாடக இசை, 7-35 வாத்திய இசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 பேச்சு, 10-00 நேயர்கேட் டவை, 10-30 செய்திச் சுருக்கம்.

விற்பனையாகின்றது!
0 முதல்வர் கருணாநிதியின் அண்ணா அஞ்சலி;
இதயத்தை தந்திடு அண்ணா!
(விலை சதம் 40.)
00 இலங்கை மாணவர்களதும் கட்டுரை, கதை, போட்டி என்பவற்றுக்கு படியுங்கள் !
மத்தாப்பு
மத்தாப்புக்கு இலங்கை முழுவதும் ஏஜெண்டுகள் தேவை. உடன் எழுதுங்கள் —
அன்பு புத்தகசாலை
27D, பெரியகடை, யாழ்ப்பாணம்.

எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
தனிப்பிறவி

விளம்பரம் செய்க

ராணி
[யாழ்ப்பாணம்)
[தினசரி 3காட்சிகள்]
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி
நடித்த
ஜீவனாம்சம்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
* சிவாஜிகணேசன் * ஜெயலலிதா
நடித்த
கலாட்டா கல்யாணம்

இப்பொழுது திரையிடப்படுகிற்து!
யாழ் வெலிங்டன் திரையில்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-00 இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம் போயா தினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-00 மணிக்கு



பத்மஸ்ரீ குணசித்திர நடிகர்
பானுமதி — எஸ் வி. ரங்கராவ்
ஏ. வி. எம். ராஜன்—பண்டரிபாய்
முத்துராமன் — பாரதி — நாகேஷ்
நடிக்கும்
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்
தாதாமிராசி

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
நடித்த
அதே கண்கள்

கிளித்தட்டு விளையாட்டினால் உடல் வலுவடையும்'
தீவுப் பகுதி எம். பி. கூறுகிறார்

அல்லைப்பிட்டி, சனி "சுதேச விளையாட்டுக்களை நாம் ஒவ்வொருவரும் அழிய விடாது பேணிக்காத்தல் வேண்டும் இன்று எமது பண்டைய விளையாட்டுக்கள் ஒருவாறு புத்துயிர்பெற்று விளங்குகிறது. கிளித்தட்டுப் போன்ற தேசிய விளையாட் டுக்களினால் இளைஞர்களு டைய உடல் வலுவடைந்து நோய்க்கு இடமில்லாமல்ப் போகின்றது. இதனால் வைத் தியர்களிடம் செல்லவேண் டிய நிர்ப்பந்தம் இல்லா மல்போகின்றது. சுதேச விளையாட்டுகளுக்கு முக்கி யத்துவம்கொடுத்து வருடம் தோறும் போட்டிகள் வைத் துப் பரிசில்கள் வழங்கிவருவ தனால் அழிந்துகொண்டு போகும் சுதேச விளையாட்டு களுக்கு புத்துயிர் ஊட்டமுடி கிறது. தீவுப்பகுதியிலே இப் படிப்பட்ட பழம்பெருமை வாய்ந்த போட்டிகளை நடா த்துவதன்மூலம்மற்றப்பகுதி வாலிபர்களிலும் பார்க்க எமது வாலிபர்களும் பின் தங்கியவர்களல்ல என்பது தெரியவருகிறது."

மேற்கண்டவாறு புளியங் கூடல் மகாமாரி சன சமூக நிலையத்தினரால் நடாத்தப் பட்ட கிளித்தட்டுச் சுற்றுப் போட்டியின் இறுதி நாள ன்று பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற் றும்போது தீவுப்பகுதி பாரா ளுமன்ற உறுப்பினர் திரு. வ. நவரெத்தினம் குறிப்பிட் டார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற கழகங்களுக்கு தீவுப் பகுதி வைத்திய அதிகாரி டாக்டர் ஆர் தெய்வேந் திரன் பரிசில்கள் வழங்கி னார். ஊர்காவற்றுறைப் பொலிஸ் அதிபர் எஸ். இரா சையாவும் கலந்துகொண் டார்

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Poya, Pre-Poya 10-30 A.M.
Gina Lollobrigida
Sean Connery
in
Woman of Straw

MANOHARA
JAFFNA
Daily
2-30 6-30 & 9-30 P.M.
Pre-Poya Poya 4 Shows
Asah Parekh, Manoj Kumar
in
DO BADAN
(Eastman color)

வாரத்தில் ரூபா ஐம்பது
இலவசமாக உங்களுக்கு கிடைக்கிறது

போயா வாரமலரிலும் போயாவுக்கும் பின் 2-ம், 4-ம், 6-ம் நாட்களிலும் 'ஈழநாடு' நடத்தும் நவீன போட்டிகளில் கலந்து கொள்ளுகிறீர்களா? ஒரு வாரத்தில் ஐம்பது ரூபாயை தட்டிக்கொண்டு போகும் அரிய வாய்ப்பை உங்களுக்கு அளித்திடுக் கிறோம். மூளைக்கு வளர்ச்சியும் மனதுக்கு மகிழ்ச்சி யும் கைக்கு பணத்தையும் தரும் இந்த எளிமை யான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு தின மும் உங்கள் 'ஈழநாடு' பிரதியை வாங்கி வாசி யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு ஜேர்மன் நாணயத்தின் மதிப்பு உயராது

ஹேஷ்யம் கூறியவர்களுக்கு பெரும் அதிர்ச்சி

பொன், மே 10

மேற்கு ஜேர்மன் அரசாங்கம் தனது 'மார்க்' நாணயத்தின் மதிப்பைத் திருத்தி அமைப்பதில்லை என்று முடிவு செய்திருக்கின்றது,

மேற்கு ஜேர்மன் மந்திரிகள் நேற்று அவசரமாகக் கூடி இதுபற்றி முடிவு எடுத்தனர் என்றும் இந்த முடிவு இறுதியானது என்றும் மேற்கு ஜேர்மன் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினர். மேற்கு ஜேர்மன் பொருளாதார அமைச்சு விரைவில் கூடி இதுபற்றி மேலும் ஆராயும் என்றும் அந்த அதிகாரி கூறினர்.

'மார்க்' நாணயத்தின் மதிப்பு அதிகரிக்கப்படலாம் என்ற நம்பிக்கையில் கடந்த சில தினங்களாகவே ஐரோப்பிய சந்தைகளில் அந்த நாணயம் பெருவாரியாக வாங்கப்பட்டது. மதிப்பு ஏற்றம் பற்றி மேற்கு ஜேர்மன் அரசு ஆலோசிப்பதாய் இல்லையென்று பல தடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் 'மார்க்'கிற்கு ஏற்பட்ட கிராக்கி குறையவில்லை. 'மார்க'கின் மதிப்பை 7 சத வீதம் குறைக்கும்படி பொருளாதார அமைச்சர் யோசனை கூறியிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன ஆனால் 'மார்க்'கின் மதிப்பைக் கூட்டுவதில்லையென்று மேற்கு ஜேர்மன் அரசு முடிவுசெய்திருப்பதுபற்றிய செய்தி வாஷிங்டனில் கிடைத்தபொழுது நாணயத்தின் மதிப்பு ஏற்றம்பற்றி எதிர்பார்த்துக் கொண்டிருந்த வட்டாரங்கள் ஏமாற்றம் அடைந்தன. ஆனால் உத்தியோக முறையில் வாஷிங்டனில் எதுவித அபிப்பிராயமும் தெரிவிக்கப்படவில்லை. லண்டன் பாரிஸ் போன்ற நகரங்களிலும் உத்தியோகபூர்வமாக கருத்துக்கள் உடனடியாக வெளியாகவில்லை.

'மார்க்'கின் மதிப்பை உயர்த்துவதில்லை யென்று முடிவு செய்யப்பட்டிருப்பினும் அதனால் ஏற்படக்கூடிய நிலைமைகளைச் சமாளிப்பதற்கு தகுந்த மாற்று நடவடிக்கைகள் எடுப்பது பற்றி மேற்கு ஜேர்மன் பொருளாதார அமைச்சு விரைவில் ஆலோசனை செய்யும் என்று ஓர் அதிகாரி கூறினர். நாணயத்தின் மதிப்பைத்திருத்தியமைப்பதில்லையென்று மேற்கு ஜேர்மன் மந்திரிசபை முடிவுசெய்த போதிலும் இதுபற்றி மந்திரிகள் மத்தியில் பலத்த கருத்துவேறுபாடுகள் நிலவுவதாக அந்த அதிகாரி ஒப்புக்கொண்டார்.

சிங்கப்பூர் பிரதமர்

அடுத்த ஐ. நா. பொ. காரியதரிசி?

ஹாங்காங், மே 10

ஐ. நா. வின் புதிய பொதுக்காரியதரிசியாக சிங்கப்பூர் பிரதமர் திரு லீ — குவான்யூ தெரியப்படலாம் என்று இங்கு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது. தற்பொழுது பொதுக்காரியதரிசியாக விருக்கும் யுதாண்டின் பதவிக் காலம் 1971-ம் ஆண்டில் முடிவடைகின்றது. அந்தப் பதவிக்கு திரு. லீ-குவான்-லீ தெரிவு செய்யப்படலாம் என்று அந்த ஆங்கிலப் பத்திரிகை கூறுகின்றது.

.....

30 ஜோடிகளுக்கு ஒரே மேடையில் திருமணம்

சென்னை மே 10

சென்னை சேத்துப்பட்டு மங்களபுரத்தில் அண்ணா நினைவு ஆலயத்தில் இம்மாதம் 18-ம் திகதி 30 ஜோடிகளுக்கு ஒரே மேடையில் திருமணம் நடைபெறும். இதனை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி நடத்தி வைப்பார்.

.....

பிரிட்டனில்

இலங்கை விமானப்படை அதிகாரி

லண்டன், மே. 10

இலங்கை விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் உட்பட பிரிட்டிஷ் இம்பீரியல் இராணுவக் கல்லூரியைச் சேர்ந்த கோஷ்டி ஒன்று சமீபத்தில் வடகிழக்கு [illegible] தெரியைக் கடைப்பிடிப்பவர். அவ[illegible]

டாக்டர் ஹுசேனின் பெருந்தன்மை

தம்மைத்தாமே வருத்திக்கொண்டார்

இரங்கற கூட்டத்தில் மத்திய மந்திரி தகவல்

சென்னை, மே 10

தாய்நாட்டுக்கு ஏற்படும் துன்பங்களுக்கெல்லாம் தம்மைத் தாமே வருந்திக் கொள்வதை ஒரு விரதமாகவே அனுஷ்டித்தவர் மகாத்மாகாந்தி. அவ்வப்போது உண்ணாவிரதம் இருந்ததும் இதற்காகவே. அவர் வழிவந்த காலஞ்சென்ற ஜனாதிபதி டாக்டர் ஸாகிர்ஹுசேனின் பெருந்தன்மை பற்றி மத்திய மின் விசை மந்திரி திரு. கே. எல். ராம் இங்கு நடைபெற்ற ஒரு இரங்கற் கூட்டத்தில் விளக்கினர். அவர் கூறியதாவது:

''இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் டாக்டர் ஸாகிர் ஹுசேன் உபஜனாதிபதியாக இருந்தபோது நடந்த நிகழ்ச்சி. அவர் வசித்த வீட்டில் அடிக்கடி மின் சாரக்கோளாறு நேரிட்டு வந்தது. அதிகாரிகளிடம் தெரிவித்தும் பயனில்லை. பிறருக்கு இதைப்பற்றிப் புகார் செய்யாமல் தமக்கு மின்சாரம் தேவையில்லை என்று சொல்லிவிட்டார். மின்விசிறிகள் இல்லாமல் சமாளித்தார். மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்துக் கொண்டு காலம் கழித்தார்.

'இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் எனக்கு இதைப் பற்றி தெரியவந்தது. டாக்டர் ஹுசேனின் பெருந்தன்மை, மனிதாபிமானம், வினயம் அதிகாரிகளின் உள்ளம் தொட்டது. எவரையும் பழிக்காமல் தானே துன்பப்படும் பெருந்தகையை இங்கு கண்டு வியந்தனர்.

உபஜனாதிபதிக்கு உண்டான சிரமத்தைத் தெரிந்து கொண்டதும் வருந்தினேன். டாக்டர் ஸாகிர் எனக்கு டெலிபோனில் தெரிவித்து, உடனே கோளாறைத் திருத்தும்படி கட்டளையிட்டிருக்கலாம். ஆனால் அவர் பொறுமையாகி [illegible] மாக [illegible] காந்திய நெறியைக் கடைப்பிடிப்பவர். அவ[illegible]

திருமலைச் செய்திகள்

நமது நிருபர்
து. பாலேந்திரா—

உணவு உற்பத்தித் துறையில் உள்ளூராட்சி மன்றங்கள் முழுமூச்சுடன் ஈடுபடுதல் வேண்டும். அரசாங்கம் வகுத்துள்ள உணவு உற்பத்தித் திட்டங்களைச் செவ்வனே கிராம, பட்டின சபைகள் அமுலாக்கினால் நாடு விரைவில் சுயதேவையைப் பூர்த்திசெய்தல் சாத்தியமாகும்.

இவ்வாறு திருக்கோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்திபற்றி ஒரு கருத்தரங்கு நகரமண்டபத்தில் நடைபெற்றபோது மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டி. வாமதேவன் அவர்கள் கூறினர். இக் கருத்தரங்கில் திருக்கோணமலை மாவட்ட, பட்டின, கிராம சபைகளின் தலைவர்கள், உள்ளூராட்சி இலாக ஊழியர்கள், காரியாதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

0 0 0

புனருத்தாரணமும் கும்பாபிஷேகமும்

பழமை வாய்ந்ததும் பிரபல்யம் வாய்ந்ததுமான சம்பூர் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்வதற்கான ஒழுங்குகள் மூதூர் பிரிவுக் காரியாதிகாரியினாலும் அதன் புதிய பரிபாலன சபையாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

0 0 0

தீக் குளிப்பு

அல்லைக் குடியேற்றத்திட்டத்திலுள்ள மகிந்தபுர [illegible] சக்தி கோவில் வருடாந்த தீக்குளிப்பு வைபவம் நடைபெற்றது

பஸ் விபத்தில் 15 பேர் பலி

கராச்சி, மே 9

மேற்கு பாகிஸ்தானில் இரண்டு பிரயாணிகள் பஸ்கள் மோதிக்கொண்டதில் 15 பேர் மரணமானர்கள். 23 பேருக்கு காயமேற்பட்டது.

.....

நாட்டின் முதுகெலும்பு வாலிபர்களே

யாழ்ப்பாணம், சனி

ஒரு கிராமத்தின் அந்தஸ்து உயரவேண்டுமானால் அதன் முதுகெலும்பு போல் நின்று உழைக்கக்கூடியவர்கள் வாலிபர்களே. எனவே தான் இந்த அரும்பணியை சிறப்புடன் செய்து எங்கள் கிராமத்தையும் ஏனைய அயல் கிராமங்களின் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரும்படி வாலிபர்களைக் கேட்கின்றேன்.

இவ்வாறு சண்டிலிப்பாய் இந்து வாலிபர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசிய சங்கத்தலைவர் திரு கே. சபாநாதன் குறிப்பிட்டார்.

— —

'நிறைய வாசிக்கவேண்டும்' —மேயர்

வெள்ளவத்தை, சனி

''சன சமூக நிலையங்களும் வாசிகசாலைகளும் பொதுமக்களுடைய அறிவை வளர்க்க உதவுகின்றன. மக்கள் பத்திரிகைகளை நிறைய வாசிக்க வேண்டும். வாசிப்பதனால் பொது அறிவைப்பெறுகிறார்கள். தமது நிலையைப் பற்றித் தீர்க்கமாகச் சிந்திக்கிறார்கள். இப்பகுதியில ஒரு புதிய வாசிகசாலையைத் திறந்து வைப்பதையிட்டுப் பெருமைப்படுகிறேன்''

இவ்வாறு கொழும்பு நகர மேயர் ஜாபீர் ஏ. காதர் மகாவத்தை சன சமூக நிலையத்தையும் வாசிகசாலையையும் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

பரீட்சை முடிவுகளுடன் சான்றிதழ்

வெள்ளவத்தை, சனி

இனிமேல் மாணவர்களுடைய பரீட்சைப்பெறுபேறுகளுடனே சித்தியெய்தியமைக்கான சான்றிதழ்களையும் வழங்குவதெனக் கல்வி இலாக்கா தீர்மானித்துள்ளது.

"ஈழத்துப் பெண்கள் பின்பற்ற வேண்டும்"

வெள்ளவத்தை, சனி

''மகாபாரதமும் இராமாயணமும் போன்ற ஒப்பற்ற இதிகாசங்கள் எழுதப்பட்ட காலத்திலேயே பாரதப் பெண்களின் பெருமையும் திண்மையும் உலகிற்கு மிக நன்றாக எடுத்துக்கூறப்பட்டன. அன்பும் அறமும் கற்புடைச் சீர்நெறியும் கொண்டு நல்வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இந்தியப் பெண்கள். இந்துமத நாகரீகத்தை இவர்கள் பண்பு பிறழாமல் மிக நல்ல முறையில் கடைப்பிடித்தார்கள்.''

இவ்வாறு ''புகழ்பெற்ற இந்தியப் பெண்கள்'' என்ற தலைப்பில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்றகூட்டமொன்றில் பேசிய திருமதி ராஜாம்பாள் கூறினா.

''தமிழ்வளர்த்த மகளிர்'' என்ற தலைப்பில் செல்வி சற்சொரூபவதிநாதன் பேசுகையில், ''சங்கீதம் பரதம், நாடகம் போன்ற பலதுறைகளிலும் சிறந்து விளங்கிய தமிழ்ப்பெண்கள் அவ்வத்துறைகளிலே சிறந்து தமிழ் வளர்த்தார்கள். இவர்களுடைய தமிழ் ஆர்வத்தையும் மொழியுணர்வையும் எமது ஈழத்துப் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டும்'' என்றார்.

சென்னையைச் சேர்ந்த செல்வி ஜானகி பேசுகையில், ''ஆத்மீகத்துறையில் பெண்கள் மேம்பட்டு விளங்கவேண்டும். அமைதியான இல்லற வாழ்வுக்கு இது வழிவகுக்கும். சமய வாழ்க்கை வாழ்பவர்கள் தான் முழு மனிதர்களாக மதிக்கப்படுகிறார்கள். நமது வருங்காலக் குழந்தைகளுக்கும் இறைபக்தியையும் ஆத்மீகரீதியான அன்பு வாழ்க்கைநெறிகளையும்நாம் போதிக்கவேண்டும்' ,என்றார்.

திருமதி இராஜலட்சுமியும் பேசினர்.

இக்கூட்டத்திற்கு கொழும்பு மாளிர் [illegible] தலைவி திருமதி லீலா சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

'வர்த்தகத்துறை பயிற்சிக்கு வசதிகள் செய்துதருக'

கல்வி அமைச்சருக்கு மகஜர்

படுத்தித்துறை, சனி

'தற்போது பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் வர்தகத் துறையில் பயிற்சிபெற்றுவரும் 44 மாணவருக்கு சிறந்த பயிற்சிக்கான வசதிகள் செய்துவைக்கப்படல்வேண்டும். இக்கல்லூரியில் தற்போது 9 தமிழ் தட்டச்சுக்கள் மட்டுமே உள்ளன. தட்டச்சுகள் மேலும் 35 தருவிக்கப்படல்வேண்டும்.'

இவ்வாறு அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் கல்வியமைச்சருக்குஅனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது. தொடர்ந்து மகஜர் கூறுவதாவது:

'வர்த்தகத்துறை விரிவுரையாளரில் அநேகமானோர் பகுதி நேரம் மட்டும் கடமையாற்றுகின்றனர். எனவே மாணவர் பூரண நன்மையைப் பெறமுடியாதுள்ளனர். எனவே வர்த்தகம், கணக்கியல், பொருளியல், வர்த்தக கணிதம் சுருக்கெழுத்து, தட்டச்சடித்தல் ஆகிய பாடங்களுக்குப் போதிய நிரந்தர விரிவுரையாளரை நியமித்தல் அவசியம்.'

தனிச்சிங்களத்தில்லைசென்ஸ்

ஆட்சிமன்றத்தில் உபசபாநாயகர் கேள்வி எழுப்புவார்

படுத்தித்துறை, சனி

கார் ஓட்டும் லைசென்ஸை தமக்குத் தமிழில் அனுப்புமாறு விண்ணப்பித்த ஒருவருக்கு மோட்டார் வாகனக் கமிஷனர் செயலகத்தினர் தனிச் சிங்களத்தில் அனுப்பி சம்பந்தப்பட்ட நபரான நீர்வேலியைச் சேர்ந்த திரு. மா. புவனேந்திரத்தின் இவ்விடயத்தை ஆட்சிமன்றத்தில் திரு. சிவசிதம்பரம் எழுப்புவதாகக் கூறியுள்ளார். அதே நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைக்கப்பட்ட குழந்தை உயிருடன் மீண்டது

பாகிஸ்தானில் நடந்த அதிசய சம்பவம்

ராவல்பிண்டி மே10

மேற்கு பாகிஸ்தானில் புதைகுழியில் புதைக்கப்பட்ட ஒரு பெண்குழந்தை 50 மணிநேரத்தின்பின் உயிருடன் மீட்கப்பட்டது,

இரண்டரை வயதான இந்தப் பெண்குழந்தை மாரடைப்பால் மரணமாகிய இறுக போடப்படாத தால் கிடைத்த இடைவெளியில் குழந்தை எழுந்து உட்கார்ந்து கைவிரல்களை சுவைத்துக் கொண்டிருந்தது.

இந்த தகவலை கராச்சியை சேர்ந்த அன்வர் அப்சல் என்ற டாக்டர் தெரிவித்தார்.

பட்ட ஒரு பெண்குழந்தை 50 மணிநேரத்தின்பின் உயிருடன் மீட்கப்பட்டது,

இரண்டரை வயதான இந்தப் பெண்குழந்தை மாரடைப்பால் மரணமாகியதாம். உடனே அது புதைகுழியில் புதைக்கப்பட்டது. முஸ்லிம் முறைப்படி வெள்ளைத்துணியில் சுற்றிக் குழந்தை புதைக்கப் பட்டது. மண் இறுக்கபபடவில்லை.

புதைக்கப்பட்ட 50 மணி நேரம் கழித்து அதே இடத்தில் இன்னொரு கல்லறை தோண்டியபோது அந்தக்குழந்தை உயிருடன் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மண் கார்ந்து கைவிரல்களை சுவைத்துக் கொண்டிருந்தது.

இந்த தகவலை கராச்சியை சேர்ந்த அன்வர் அப்சல் என்ற டாக்டர் தெரிவித்தார்.

'கல்லறை இறுக மூடப்படாதால்குழந்தை சுவாசிப்பதற்கு தேவையான பிராணவாயு உள்ளேயே இருந்திருக்கிறது. தவிர இரண்டரை வயதுடைய குழந்தைக்கு பெரியவர்களைபோல அதிக பிராணவாயு தேவைப்படாது எனவே குழந்தை பிழைத்துக் கொண்டது என்று அந்த டாக்டர் கூறினார்,

இந்திய ஜனாதிபதி தேர்தல்: புதிய சட்டம் உருவாகும்

புதுடில்லி மே,10

இந்திய ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக புதிய சட்டமொன்றை இந்திய அரசாங்கம் விரைவில் நிறைவேற்றவிருக்கின்றது. இதற்கான ஒரு மசோதா அடுத்த வாரத்தில் லோகசபையில் தாக்கல் செய்யப்படும்.

ஜனாதிபதி அல்லது உப ஜனாதிபதி இல்லாத சமயம் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி ஜனாதிபதியாகக் கடமையாற்றுவதற்கு இந்தச்சட்டத்தின் மூலம் வகை செய்யப்படலாம்.

காலஞ்சென்ற ஜனாதிபதி டாக்டர் ஹுசேனின் மனைவிக்கு வருடம் ஒன்றிற்கு ரூபா 15000 பென்சன் வழங்குவதென்று இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது இது தவிர இலவச மருத்துவ உதவியும் அவருக்கு வழங்கப்படும்.

டாக்டர் ஸாகிர் ஹுசேனின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்ள டில்லிக்கு வந்து மாரடைப்புக் குள்ளாகி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் திரு முகம்மது ஹுசேன் உடல்நிலை மேலும் தேறியிருப்பதாக டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

வியட்காங் யோசனை

சில அம்சங்களுக்கு யு. எஸ். வரவேற்பு?

வாஷிங்டன் மே.10

வியட்னும் பிரச்னைக்கு வியட்காங்கியரின் அரசியல் அங்கமான தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ள திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலாவிட்டாலும் அதிலுள்ள சில அம்சங்கள் பரிசீலனை செய்வதற்கு உகந்தவைதான் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ்கூறியிருக்கின்றார்.

திரு. ரோஜர்ஸ் விரைவில் சைகோனுக்கு விஜயம் செய்யவிருக்கின்றார். அவர் பின்னர் இந்தியா, பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கும் போவார்.

தேசிய விடுதலை முன்னணியின் திட்டத்தை தென் வியட்னும் நிராகரித்துவிட்ட போதிலும் படை விலக்கல் போன்ற சில அம்சங்களைப் பற்றி ஆராய அது விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது

அமைச்சர் கோவிந்தசாமி

சென்னை, மே 10

தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு. கோவிந்தசாமியின் உடல்நிலை குறித்து கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லையென்று டாக்டர்கள் அறிவித்துள்ளனர். அவருடைய உடல்நிலை நன்கு தேறிவருவதாக அவர்கள் கூறினார்கள்.

அமைச்சரை ஒருமாத காலம் ஆஸ்பத்திரியில் இருந்து ஓய்வு எடுக்கும்படி டாக்டர்கள்கூறியிருப்பதாகவும் தெரிகின்றது. இதற்கிடையில் திரு கோவிந்தசாமிக்கு உடல்நலம் குன்றியிருப்பதால் அவர் வகித்த அமைச்சின் பொறுப்புகளை இதர அமைச்சர்கள் பகிர்ந்துகொண்டுள்ளனர்.

லண்டன், மே. 10

இலங்கை விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் உட்பட பிரிட்டிஷ் இம்பீரியல் இராணுவக் கல்லூரியைச் சேர்ந்த கோஷ்டி ஒன்று சமீபத்தில் வடமேற்கு இங்கிலாந்தில் சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொண்டது.

ராயல் இலங்கை விமானப் படையைச் சேர்ந்த காப்டன் பி. எச். மென்டிஸ் தற்சமயம் பிரிட்டிஷ் இம்பீரியல் இராணுவக்கல்லூரியின் பயிற்சி வகுப்புகளில் பங்கு பற்றிவருகிறார். சாம்ராஜ்ய நாடுகளின் ஆயுதப் படைகளைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகளுக்கென வருடந்தோறும் ஒழுங்குசெய்யப்படும் பயிற்சி வகுப்புகள் இவை. ராயல் இலங்கை விமானப்படையின் உளபதி வைஸ் மார்ஷல் ரோகன் அமரசேகராவும் இதற்கு முன்பு இக்கல்லூரியின் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

காப்டின் மென்டிஸ் உட்பட ஆயுதப்படை அதிகாரிகளைக்கொண்ட மேற்படி தூதுகோஷ்டியினர் வடமற்கு இங்கிலாந்திலுள்ள பிரபல பிரிட்டிஷ் பொறியியல் நிறுவனங்கள், வேலைக்கூடங்கள், ஆலைகள், கப்பல் கட்டுதளங்கள் ஆகியவற்றிற்கு விஜயம் செய்தார்கள்.

.....

பிரிட்டனிடம் இலங்கை கோரிக்கை

லண்டன், மே 10

பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கியுள்ள கடனுதவியின் கீழ் இலங்கை அரசாங்கம் 3,829,720 ரூபா பெறுமதியான பொருட்களுக்கு பிரிட்டனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கனவே பிரிட்டிஷ் கடனுதவியைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் பிரிட்டிஷ் லேலன்ட் மோட்டார்லிமிட்டட் ஸ்தாபனத்திடமிருந்து 201,000 ரூபா பெறுமதியான 100 லேலன்ட் பஸ் உடல்களை வழங்கியுள்ளது. அதோடு பிரிட்டிஷ் மோட்டார் காப்பரேஷனிடமிருந்து 34 ஆஸ்டின் டிரக்குகளையும் 23 மொறிஸ் வான்களையும் இலங்கைபெற்றுள்ளது.

டெலிபோனில் தெரிவித்து, உடனே கோளாறைத் திருத்தும்படி கட்டளையிட்டிருக்கலாம். ஆனால் அவர் பொறுமைசாலி அடக்கமாக காந்திய நெறியைக் கடைப்பிடிப்பவர். அவரைக் கண்டதும் ஒரு வரம் கேட்டேன். தம்மால் முடிந்தால் நிறைவேற்றுவதாகப் பதில் அளித்தார். மீண்டும் வீட்டில் மின்சார இணைப்புக் கொடுக்க அனுமதி கோரினேன். பிறந்தது புன்னகை. உமக்கு எப்படித் தெரியும் என்று கேட்டார்.

ஜனாதிபதி மரணச் செய்தி தேசாய் விளக்கம்

புதுடில்லி, மே 10

பாரத ஜனாதிபதி டாக்டர் சாகிர்ஹுசேன் மரணம் பற்றி உடன் வானொலியில் அறிவித்தல் செய்யப்பட முடியாததற்கான விளக்கத்தை இன்று லோகசபையில் துணைப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தெரிவித்தார்.

டாக்டர்ஹுசேன் மரணமானபோது உதவி ஜனாதிபதியும் பிரதமரும் புதுடில்லியில் இல்லாதிருந்ததாலேயே இந்த அறிவித்தல் பற்றி திடீர் முடிவு எடுக்கமுடியாத நிலையில் வானொலியில் உடன் அறிவிக்க முடியாதிருந்தது என அவர் விளக்கினார்.

தகவல் அமைச்சர் திரு. சத்தியநாராயண் சின்ஹா இதுபற்றி மேலும் விளக்குகையில் தமிழக முதலமைச்சர் அண்ணாதுரை மரணமானதாக அவர் மரணமாக முன்னரே ஒருமுறை வானொலி அறிவித்ததால்இதுபற்றிஅதிருப்திநிலை ஏற்பட்டதாகவும் இவ்விதம் தலைவர்களது மறைவு அறிவிக்கப்படும்போது எவ்வளவு அவதானமாக இருக்கவேண்டியது அவசியமாக இருப்பதாலேயே தாமதம் ஏற்படுவதாக எடுத்துக் கூறினார்

பேஹம் ஹுசேன் செய்தி

புதுடில்லி: மே. 10

தமது கணவர் டாக்டர் சாகிர் ஹுசேன் மறைவு குறித்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் வெளி நாடுகளிலிருந்து இரங்கல் செய்தியை அனுப்பியவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் பேகம் சாகிர் ஹுசேன் நன்றிதெரிவித்துள்ளார்.

0 0 0

தீக்குளிப்பு

அல்லைக் குடியேற்றத்திட்டத்திலுள்ள மகிந்தபுர பராசக்தி கோவில் வடுந்த தீக்குளிப்பு வைபவம் நடைபெற்றது

0 0 0

பாதைப் படகு

கிளிவெட்டி ஆற்றிற்கு மற்றுமொரு புதிய பாதைப் படகு வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது.

0 0 0

ரூ. 4 லட்சத்து 56 ஆயிரம்

கிண்ணியா பட்டின சபை எல்லைக்குள் மின்சாரம் வழங்குவதற்காக அரசாங்கம் கிண்ணியா பட்டின சபைக்கு நான்கு இலட்சத்து ஐம்பத்தாறுயிரம் ரூபா வழங்கியுள்ளது.

0 0 0

சேரிஒழிப்புத் திட்டம்

சின்னக் கிண்ணியாவில் 30,000 ரூபாய் செலவில் சேரி ஒழிப்புத் திட்டம் ஒன்றை அரசாங்கம் அமுலாக்க விருக்கின்றது. இவ்வாறு திருக்கோணமலை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு சோமபாலா குணதீரா தகவல் வெளியிட்டார்.

0 0 0

குளங்கள் திருத்துவேலை

திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த வேப்பங்குளம், கரடிப்பனிக்குளம், பொய்கைக் குளம், குசவனாற்றுக்குளம், யானை விழுந்தான் குளம், காலிக்கட்டுக் குளம், ஒட்டன்குளம் தொண்ட் முறிப்புக்குளம், ஒட்டுப்புல்லுக்குளம் கல்கடவல வீவ ஆகிய 11 குளங்களைத் திருத்துவதற்காக திருக்கோணமலை கமக்தொழில் சேவை உதவி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை

உருத்திரபுரம், சனி

உருத்திரபுரம் பத்தாம் வாய்க்காலில் இருக்கும் டிக்ரென் என்னுமிடத்திலிருக்கும் கனகசபாபதி அன்னச்சிப்பிள்ளை நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை புரிந்து கொண்டார்.

கிளிநொச்சி வைத்திய அதிகாரி டாக்டர் சண்முகநாதன் பிரேதபரிசோதனை செய்தார். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். யோகலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

வெள்ளவத்தை, சனி

இனிமேல் மாணவர்களுடைய பரீட்சைப்பெறுபேறுகளுடனே சித்தியெய்தியமைக்கான சான்றிதழ்களையும் வழங்குவதெனக் கல்வி இலாக்கா தீர்மானித்துள்ளது.இப்போது வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள புதிய இயந்திரங்களின் உதவியுடன் இவ்வேலைநடைபெறும்.

மேற்படி இயந்திரம் தானாகவே பரீட்சார்த்திகளின் புள்ளிவிபரங்களைப் பதியுமாம்

வகுப்புகளுக்குச் செல்லவில்லை

வெள்ளவத்தை, சனி

கட்டுப்பத்தை உயர் தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் எவரும்நேற்று வகுப்புக்களுக்குச் செல்லவில்லை.7.5.69 ல் விடுதியை விட்டு 200 மாணவர்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தாகக் கூறப்படுகிறது.

விடுதிக்குள் மாணவர்களை அனுமதித்தாலன்றி இவர்கள் எவரும் வகுப்புகளுக்குச் செல்வதில்லை என முடிவு செய்துள்ளனர்.

ரூபா 300 அபராதம்

வல்வெட்டித்துறை, சனி

அல்வாய் வடக்கைச் சேர்ந்த கந்தன் குலசிங்கம் என்பவர் அதே இடத்தைச்சேர்ந்த பொ. வள்ளிப்பிள்ளைக்கு கடந்த வருடம் ஆவணி மாதம் 31-ந் திகதி அடித்தும் சங்கிலி களவாடியதாகவும் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக்கண்டுரூபா 300 அபராதம் கட்டத்தவறினால் 9 வாரச் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் எனத் தீர்ப்பளித்தார்.

நாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம். சனி

யாழ். நாயன்மார்கட்டு மகேசுவரி வித்தியாசாலையில் திருநாவுக்கரசுநாயனார் குருபூசை நேற்று நடைபெற்றது. நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகத்தினரால் திருமுறை பஜனையும், சொற்பொழிவும் நிகழ்ந்தன.

பருத்தித்துறை, சனி

கார் ஓட்டும் லைசென்ஸை தமக்குத் தமிழில் அனுப்புமாறு விண்ணப்பித்த ஒருவருக்கு மோட்டார் வாகனக் கமிஷனர் செயலகத்தினர் தனிச் சிங்களத்தில் அனுப்பியுள்ளனர். இதை ஆட்சேபித்து அவர் எழுதிய கடிதத்திற்குப் பல மாதமாகியும் பதில் வராமையால், அவர் உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரத்திடம் முறையிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட நபரான நீர்வேலியைச் சேர்ந்த திரு. மா. புவனேந்திரத்தின் இல்லியத்தை ஆட்சிமன்றத்தில் திரு. சிவசிதம்பரம் எழுப்புவதாகக் கூறியுள்ளார். அதே நேரத்தில் தமிழ் உரிமை விசேஷ சட்டம் நிறைவேற்றப்பட்டபின் ஏற்பட்டிருக்கும் வேறு சில இவ்வித தவறுகளையும் அவர் சுட்டிக்காட்டவிருப்பதாகத் தெரிகிறது.

பரீட்சை எடுத்தவர்களுக்கு சலுகை அளிக்குக"

பருத்தித்துறை. சனி

"இவ்வாண்டு க. பொ. த. (சாதாரண பரீட்சை சித்திரை மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டதன் விளைவாக, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரவேசப் பரீட்சைக்குப் பல மாணவர் தோற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. வழக்கமாக க. பொ. த. பரீட்சை முடிவுகள் வெளிவந்த பின்னரே ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விசேட பயிற்சிகளுக்கான பிரவேசப் பரீட்சை நடப்பது வழக்கம். ஆனால் இவ்வாண்டு பரீட்சை முடிவுகள் வெளிவருமுன்னரே. பிரவேசப் பரீட்சை நடக்கவிருப்பதால், க. பொ. த. பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளை பிரவேசப்பரீட்சைக்கு அனுமதிக்கவேண்டியது நீதியும் முறையுமாகும்"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பரீட்சைஅதிகாரிக்குஎழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய திரைப்படங்களின் இறக்குமதியை தடைசெய்க'

தஹா கோருகிறார்

கோட்டை, சனி

உடனடியாக இந்திய திரைப்படங்களின் இறக்குமதியைத் தடைசெய்ய வேண்டுமென மந்திரிசபையை உள்நாட்டமைச்சர் டாக்டர் தஹாநாயக்கா கேட்டுள்ளார்.

தொடர்ந்து இந்திய திரைப்படங்களை இறக்குமதி செய்வதற்கு நாடெங்கும் எதிர்ப்புகள் தோன்றியுள்ள காரணத்தினாலேயே உள்நாட்டமைச்சர் இறக்குமதியை உடனடியாகத் தடைசெய்யவேண்டுமெனக் கேட்டுள்ளதாகத் தெரிகிறது.

தரத்தில் குறைந்த தென் இந்திய திரைப்படங்களைத் தொடர்ந்து இறக்குமதி செய்வதால் உள்நாட்டுத் திரைப்படத்தொழில்பாதிக்கப்படுகிறதோடு பணமும் வீணாகச் செலவாகிறது என அமைச்சர் தஹாநாயக்கா மந்திரிசபைக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

கண்டனம்

திருமலை, சனி

நெல் வேளாண்மைக்குத் தண்ணீர் தராது கரும்புச் செய்கைக்கு நீரைக்கொடுப்பது மிகவும் அநீதியானதொரு செயலாகும். உணவு உற்பத்தியில் கவனம்செலுத்தும் ஓர் அரசாங்கம் இவ்வாறு கரும்புச் செய்கைக்காகக்கமக்காரருக்குப்பெடுத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருக்கோணமலை நகர மண்டபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சிமன்ற அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கின் மதிய நிகழ்ச்சியில் தம்பலகாமம் கிராமசபைத்தலைவர் திரு. எம். சண்முகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

தலையற்ற உடல்

கொழும்பு, வெள்ளி

மக்கோனுவிலுள்ள ஆற்றங்கரையொன்றில் தலை துண்டிக்கப்பட்ட சடலமொன்றை பொலிசார் இன்று கண்டெடுத்தனர்.

ஜேமிஸ் சிறிவர்த்தனா (வயது 55) என்பவரின் சடலமென அடையாளம் காணப்பட்ட இவ்வுடலில் பல வெட்டுக் காயங்கள் உள்ளனவாம். பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

செல்வந்தர்களும், ஆற்றல் படைத்தவர்களும் ஏழைகளின் பால் அன்புகாட்டவேண்டும். அவர்களை ஒருபோதும் தவிக்கவிடக்கூடாது. அனைவரும் மூழ்கவேண்டும். அல்லது அனைவரும் நீச்சல்போடவேண்டும்.

மகாத்மா காந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் சித்திரை மாதம் 29-ந் திகதி (11 - 5 69)

இ போ. ச. தூண்டுதல் திட்டம்

இலங்கைப் போக்குவரத்துச்சபையைப் பற்றி பொதுமக்கள் குறைசொல்லாத நாளுமில்லை புகார் செய்யாத நேரமுமில்லை புகார்களை விசாரித்துஊழியர்களுக்கு அபராதம் விதித்தும், மற்றும் பல தண்டனைகள் கொடுத்தும் புகார்களும் குறையவில்லை, மக்களின் குறைகளும் தீரவில்லை. இ. போ. சபைக்கு இலாபமும் அதிகரிக்கவில்லை. இந்நிலையில் இலங்கைப் போக்குவரத்துச் சபை இலாபம் பெறவும் பொதுமக்களுக்கு திருப்தியளிக்கக் கூடியதாக அதாவது அவர்களின் முணுமுணுப்பில்லாத முறையில் சீராகச் சேவைநடைபெறவும் தமது ஊழியர் சிறந்தமுறையில் தங்கள் உழைப்பை நல்கவும் வழி என்ன?

இதற்கு இ. போ சபை ஒரு நல்ல திட்டம் வகுத்து அதை தேசிய சேவைகள் அமைச்சரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். பயனுள்ள திட்டம். இதைச் சரியான முறையில் செயல்படுத்தினால் பஸ் பிரயாணிகளுக்கும் பஸ் ஊழியர்களுக்குமிடையில் நல்லுறவு பலப்படவும் உதவும்.

இ போ சபைக்கு நாடு முழுவதிலும் பல டிப்போக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு டிப்போவுக்கும் குறிப்பிட்ட தொகை பஸ்கள் ஊழியர்கள் இருக்கின்றனர். தினமும் இத்தனை மைல்களுக்கு சேவை நடைபெறவேண்டுமென்ற விதியுண்டு. பொதுவாக எல்லாடிப்போக்களிலுமுள்ள பஸ்கள் அனைத்தும் தினசரி சேவையிலீடுபடுவதில்லை. பஸ்கள் பழுதடைந்து நாட்கணக்கில்மாதக்கணக்கில் கிடந்துவிடுவதுமுண்டு. டிப்போவிலிருந்து புறப்படும் பஸ் தனது சேவையை உரிய நேரத்தில் ஒழுங்காக இருப்பதில்லை. இடைவழியில் அது மணிக்கணக்கில் சத்தியாக்கிரகம் செய்துவிடுவதுமுண்டு இவைதவிர பஸ் ஊழியர்கள் நிரந்தரமாக என வேலைக்கு வராமல் நின்றுவிடுவதாலும் பஸ் சேவை சீர்குலையும். எனவே ஊழியர்கள் நிரந்தரமாக வேலைக்கு வரவும், பஸ்களைப் பழுதுபார்த்து சுத்தமாக வைத்திருக்கவும் பஸ்கள் ஒவ்வொன்றும் தினசரி தனக்குரிய மைல் பிரயாணத்தை ஒழுங்காகச் செய்துமுடிக்கவும் விபத்துக்கள் நடவாமல் பஸ் ஊழியர்கள் கவனமாகத் தமது கடமையைச் செய்து வருமானத்தை அதிகரிக்கவும் ஒவ்வொன்றுக்கும் புள்ளி கொடுத்து அதற்கேற்ப ஒவ்வொரு டிப்போவுக்கும் மும்மூன்று பரிசுகள் வழங்குவதுதான் இ போ. சபையின் புதிய தூண்டுதல் திட்டம். இதன்படி 1400 புள்ளிகள் பெறும் ஒரு டிப்போ முழுப் பரிசையும் பெறும். மூன்று மாதங்களுக்கொரு தடவை இப்பரிசுகள் வழங்கப்படும், எந்த டிப்போ வெற்றியீட்டுமென்பதைப்பற்றி முன்னரே தெரிவிக்கும் பஸ்பிரயாணிக்கும் நல்ல பரிசு கிடைக்கவும் இந்தத் திட்டம் சந்தர்ப்பமளிக்கிறது. பஸ் ஊழியர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்பையும் சரிவரச்செய்வதற்கும் எந்த ஒரு ஊழியர் தவறு செய்தாலும் அவரை அந்த டிப்போவைச் சேர்ந்த இதர ஊழியர்களே திருத்திக்கொள்ளவும் தூண்டுதல் அளிக்கும் நல்ல திட்டம் இது. அபராதமும் தண்டனையும் சாதிக்கமுடியாதவற்றை இத்தூண்டுதல் திட்டம் சாதிக்க முடியும். இ போ சபையின் இத்திட்டம் மட்டும் வெற்றியில்தான் [illegible]

குடும்பம் ஒரு கிராமமாக வேண்டும்

— வினோபாபாவே —

இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு குடும்பமாகவேண்டும். அப்பொழுது கிராமத்தின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மற்றச் சமுதாய நலப் பணிகளும் கூட்டாகத் திட்டமிடமுடியும் என்று வினோபாவே அடிகள் இகுகட்டுரையில் தெரிவிக்கும் கருத்துக்கள் இலங்கையின் முன்னேற்றத்துக்கும் பெரிதும் உதவுவதாக உள்ளன.

ஒவ்வொரு கிராமமும் ஒரு குடும்பம்போல் வாழ்வது என்று தீர்மானித்துக் கொள்ளவேண்டும். உங்கள் குடும்பங்களையே மேலும் விரிவாகக்கிக் கொள்ளுங்கள் என்றே நான் சொல்லுகிறேன். அதற்குக் கிராமத்தில் உள்ள அத்தனை பேருக்கும் ஒரே இடத்தில் சமையல் செய்யவேண்டும். எல்லோரும் அங்கே சேர்ந்து சாப்பிடவேண்டும் என்று அர்த்தமல்ல. கிராம மக்கள் அனைவரும் தங்கள் பொருளாதார, சமூக காரியங்கள் அனைத்தையும் பற்றிக் கூடி யோசித்துத் தீர்மானம்செய்து, நடத்திவந்தால்போதும். அவர்கள் எல்லோருக்குமே தம்மிடையே உள்ள ஏழைகளைப் பற்றிய கவலைவேண்டும். கிராமத்தில் உள்ள குழந்தைகள், முதியவர்கள், நோயாளிகள், அனாதைகள், வேலையில்லாதவர்கள் ஆகியோருக்கு உதவத் தாம் கடமைப்பட்டவர்கள் என்பதை அவர்கள் உணர்ந்து தேவையானதைச் செய்தால் போதும். ஒவ்வொரு கிராமமும் கிராமதானம் ஆகிவிடுகையில் அவை பெரிய குடும்பங்களாய் மாறிவிடுகின்றன.

இதற்கு ஊழியர்கள் வேண்டும். எங்கிருந்து வருவார்கள்? அதற்கு நான் ஒரு வழிசொன்னேன். அதாவது ஒவ்வொரு குடும்பமும் கிராமத்திற்கு ஊழியம் செய்வதற்காக ஒருவரை அனுப்பிவைத்து அவருக்காகும் செலவை ஏற்றுக்கொள்ளலாம். இவ்வாறு இந்தியா முழுவதிலும் செய்தால் அதாவது இந்தியக் குடும்பம் ஒவ்வொன்றிலிருந்தும் நாட்டுப் பணிக்காக ஒவ்வொரு ஊழியர் கிடைத்தால் 3 லட்சம் ஊழியர்கள் சேர்ந்துவிடுவார்கள். ஆனால் இப்போது இவ்வளவு பேர் வேண்டுமென்று சொல்லவில்லை. இப்பொழுதைக்கு ஒரு மாவட்டத்திற்கு எனக்கு 1000 ஊழியர்கள் கிடைத்தால் போதும். இதேவகையில் ஒவ்வொரு மாவட்டமும் 1000 ஊழியர்களை அனுப்பினால் நாடு முழுவதிலும் [illegible]

ஓர் உதாரணம்

ஒரு கிராமம் கிராம தானமானால் அங்கே என்னென்ன செய்ய முடியும் என்பதை நாம் தெரிந்துகொள்வதற்காக ஒரு கிராமத்தைப் பற்றி இப்போது மாதிரிக்காக யோசித்துப் பார்ப்போம். இந்த கிராமத்தில் குஷ்டரோக சிகிச்சைக்காக ஆசிரமம் ஒன்று இருக்கிறது. இந்தியாவில் இந்த நோய் அதிகமாய்ப் பரவி இருக்கிறதென்று உங்களுக்குத்தெரியும்.

இந்தியா முழுவதிலும் மக்கள் தொகையில் ஒரு சதம் பேருக்கும் அதிகமாக இந்த நோய் இருக்கிறது என்பதை நான் எண்ணிப்பார்க்கவேண்டும். இந்தியாவில் மக்கள் தொகை 48 கோடி என்றால் குஷ்டநோய் உள்ளவர்கள் 50 லட்சத்திற்கும் அதிகம் பேர் இருப்பார்கள் என்று ஆகிறது. சில பிரதேசங்களில் இந்நோய் உள்ளவர்கள் 2 சதவிகிதம்பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இது போன்ற ஆசிரமங்களில் சேர்ந்து சிகிச்சை செய்வதென்றால் ஊருக்கு ஊர் ஆசிரமங்கள் நடத்த வேண்டி இருக்கும். அதற்குக் கோடிக்கணக்கில் பணம் தேவைப்படும்; பல்லாயிரம் ஊழியர்கள் வேண்டி இருக்கும் இதெல்லாம் நடக்கக் கூடியதா? இம்மாதிரியான ஆசிரமங்கள் இருந்தால் நல்லது தான் ஏனெனில் இங்கே குஷ்டநோய்க்கு எப்படி சிகிச்சை செய்வதென்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆகையால் இது போன்ற ஆசிரமங்களை பயிற்சி அளிக்கும் கேந்திரங்களாகக் கருதலாம். பிறகு என்ன செய்ய வேண்டும்? கிராமந்தோறும் கிராம சபைகள் அமைத்து அந்தந்தக்கிராமத்திலுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பொறுப்பை அச்சபை ஏற்றுக்கொண்டு விட்டால் பிரச்னை தீர்ந்துபோகும்.

இதை நான் உதாரணமாகச் சொன்னதன் கருத்து கிராமங்கள் கிராமதானமானால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குடும்பம்போல் வாழ்க்கையில் இதையும் இதே போன்ற பிறபிரச்னை[illegible]

றும் சொல்லிவந்திருக்கிறேன். அவர்கள் கிராம சபைக்குக் கடன்கொடுத்து உதவலாம். பெரிய பணக்காரர்கள் பணம்கொடுத்து உதவவேண்டும் என்பதைவிட சாதாரண மனிதர்களும் அதிக பணமில்லாதவர்களும் உதவுவதையே நான் விரும்புவேன். எவர் உதவுவதாய் இருந்தாலும் கிராமசபைக்கு 100 ரூபாய் கடன் கொடுத்தால் திரும்ப 96 ரூபாய் வந்தால் போதும் என்று எண்ண வேண்டும்.

ஒரு நண்பர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

"நீங்கள் 'கீதைப்பேருரை'களிலேயே உலகில் காமம், குரோதம், உலோபம் என்ற மூன்றும் செய்துவருவதாக மும்முக வேலைத்திட்டத்தைப் பற்றிக் கூறியிருக்கிறீர்கள். அதை நன்கு விளக்கும்பொருட்டு உபநிடத்தில் வரும் 'தமம்', 'தானம்' 'தயை' பற்றிய கதையையும் விரிவாக தந்திருக்கிறீர்கள். அதில் காமம், குரோதம், உலோபம் என்ற மூன்றையும் அடக்குவதற்காகக் கூறப்பட்டுள்ள இந்த மூன்று உபாயங்களே இப்போது மும்முக வேலைத்திட்டமாக நம்முன் வந்திருக்கிறது. அவைகளில் ஒன்று கதர் வேலை; இரண்டாவதுகிராம தானவேலை; மூன்றாவது சாந்திசேனை வேலை; இந்த சாந்திசேனைப் பணி கடுணையினால் தூண்டப்பட்டு செய்வதேயன்றி, வேறல்ல. இதில் கோபத்தை எதிர்த்து கடுணை நிலைநிறுத்தப்படுகிறதுகிராமதானப்பணியோ உலோபம் அல்லது பணஆசையை எதிர்த்து தானம் செய்யும்படி மக்களை தூண்டுவதன் மூலம் செய்யப்படுவது- மேலும் இந்தக் கதர் கிராமக் கைத்தொழில்கள் என்பவை இப்போது உலகில் எங்கும் பெருகியுள்ள ஆடம்பரத்தையும் சுகபோகங்களில் பற்றையும் எதிர்த்து அவைகளை அடக்கும் பொருட்டு ஏற்பட்டிருப்பது. அதாவது எளிய முறையில் வாழ்வதே தமமாகும். தமம், தானம், தயை என்ற மூன்றையுமே நீங்கள் இப்போது இந்த மும்முகவேலைத் திட்டத்தின் மூலம் கடைப்பிடிக்கச் சொல்லி வருகிறீர்கள்.

இந்த வேலைத்திட்டத்தை எவராலும் புறக்கணிக்க முடியப்போவதில்லை. தயையும் விடுவதற்கில்லை, தமக்[illegible]

செய்திச் சுருக்கம்

கிராமசபை தேர்தல்

வாழைச்சேனைகிராமசபையின் பொதுத்தேர்தல் இம்மாதம் 18-ந் தேதி நடைபெற விருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் அதிகாரி திரு. ஒஸ்ரின் பெர்ணாண்டோ வேட்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். 7 வட்டாரங்களைக்கொண்ட இச்சபையின் 6-ம் வட்டாரத்தில் திரு. கே. இளையதம்பி போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

0 0 0

பிணையில் சென்றார்

மானவல்லைப் பகுதியில் 70 அடிப் பள்ளத்தாக்கில் பாய்ந்து விபத்துக்குள்ளாகிய இ. போ. ச. பஸ்சாரதியான மீரிகமையைச் சேர்ந்த எஸ். பியசேனா என்பவர் கேகாலை பதில் நீதவான் திரு. டபிள்யூ. டி. டி. றெக்சினால் ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். பன்னிப்பிட்டியாவைச் சேர்ந்த ஒருபெண்இந்த விபத்தில் மரணமடைந்தார்.

0 9 0

இடிதாக்கி மரணம்

எகலியகொடை பலிகல என்ற இடத்தைச் சேர்ந்த நியால் என்ற பள்ளி மாணவன் இடிதாக்கியதன் விளைவாக மரணமானார். எகலியகொடை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமானான்.

0 0 0

எல்லை விஸ்தரிப்பு

முதலிக்குளம்படித்தவாலிபர் விவசாயகூட்டுறவு சங்கஅங்கத்தவர்கள் தமது சங்கத்தின் பெயரை மாற்றியமைத்து சங்கத்தின் எல்லையையும் விஸ்தரிப்பதாக முடிவுசெய்துள்ளனர் எல்லையை விஸ்தரிப்பதனால், சங்கத்தின் முன்னைய எல்லைக்கு அருகாமையில் உள்ள பெரியகுளம், விவசாய கலாசார அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாகத்தினுள் அடங்கியுள்ள 428 இரண்டு ஏக்கர் காணிக[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாறன் எழுதுவது

ஒரு நண்பரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு பல குழந்தைகளும், 'ஈழநாடு' பத்திரிகையில் வரும் புளுகுப்போட்டி, முதலெழுத்துப்போட்டி, செய்தித் தலைப்புப்போட்டி, பொது அறிவுப் போட்டி, விகடகவி, முதலியவற்றை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். அவர்களும் இந்தப் போட்டியில் கலந்துகொள்கிறார்களாம். போட்டி மிகவும் சுலபமென்றும், இதைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்றும் சொன்னார்கள்.

பரிசுபெற்ற அன்பர்கள் பாராட்டி நன்றி தெரிவித்திருக்கிறார்கள், வேறு பல விதமான போட்டிகளையும் நடத்த அன்பர்கள் புதிய யோசனைகளைக் கூறலாம். வாராவாரம் அதிகமான விடைகள் கிடைக்கின்றன. எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.

0 0 0

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த ஒரு தமிழ் மூதாட்டிக்கு மூன்று மாதங்களாக பென்சன் கிடைக்கவில்லை. எவ்வளவோ எழுதி பகீரதப்பிரயத்தனம் செய்ததின் பயனாக, கொழும்பிலிருந்து தனிச்சிங்களத்தில் அவருக்கு ஒரு கடிதம் கிடைத்திருக்கிறது.

அதில் எழுதியிருப்பது புரியாமல், ஒரு சிங்களவரைத் தேடிச்சென்று கேட்டதற்கு, பம்பலப்பிட்டி தபாலாபீஸில் பென்சன் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆறு மாதங்களுக்குப் பின் கிடைத்தஅக் கடிதம் கூறியதாகத் தெரிகிறது.

அம்மூதாட்டி ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்துக்கு பதிலில் ஆங்கிலத்திலும் ஒரு மொழிபெயர்ப்பு வைக்கக் கூடாதா? பென்சன் காரியாலயத்தில் ஏன் இவ்வளவு தவக்கம்? அங்கு கிளார்க்மார்கள் தூங்குகிறார்களா? பென்சனை எதிர்பார்த்து வாழ்கிறவர்களுக்கு, இவ்வித தவக்கத்தால் எவ்வளவு இம்சை என்பதை விளக்கத் தேவையில்லை, கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் அதிக வேலையிருப்பின், இதை அந்தந்த மாவட்டத்திலுள்ள கச்சேரிசளுக்கு மாற்றிவிடக்கூடாதா? ?

0 0 0

ஒவ்வொரு சமயத்தவருக்கும் வழிபட வெவ்வேறு இடங்கள் உள்ளன. சமயங்களின் பெயரால் பொதுமக்கள் இவ்விதம் பிரிந்து பிளவுபட்டிருக்கிறார்கள். எல்லா சமயத்தவரும் சென்று அமைதியாக வழிபடக்கூடிய "21-வது நூற்றாண்டுக் கோயில்" ஒன்று யாழ் பாணத்தில் கட்டப்படுவதாக ஓர் அன்பர் கூறி, அங்கு அழைத்துச்சென்றார்.

நல்லூரிலே சட்டநாதர் கோவிலுக்குப் பக்கத்திலே திவ்யஜீவன சங்கத்தின் ஆதரவில் அந்தப் பெரிய மண்டபம் கட்டப்படுவதைப்பார்த்தேன், அதில எல்லா சமயப் பெரியோர்களுக்கும், கடவுளர்களுக்கும் இடம் இருக்குமாம்.

ஜோதிமயமான ஓர் இலிங்க வடிவம் சைவர்களுக்காக அமைக்கப்படுமென்றும் அறிந்தேன். கடவுள் ஒருவரே' ஆனால் மக்கள் வெவ்வேறுபெயர்கள்கொடுத்து அழைக்கின்றார்கள். இந்த உண்மையை உணர்ந்தால், சமயத்தின் பெயரால் தெய்வத்தின் பெயரால் உலகில் சண்டை சச்சரவுகளே இராது.

இன்னும் சில மாதங்களுக்குள் இந்த நவீன மண்டபவேலை பூர்த்தியாகிவிடலாமென்று தெரிகிறது. மதங்களின் பெயரால் பிளவுபட்டுள்ள மக்கள் குலத்தை ஒன்று படுத்தச் செய்யும் நன்முயற்சிகள் வரவேற்கத்தக்கனவாகும். பிறசமயங்களைப் பற்றி வெறுப்பும் பகையும், உயர்வு தாழ்வு மனப்பிராந்திகளும் இல்லாமல் ஒரளவாவது செய்து மக்கள் ஒன்றுபட்டு வாழச் செய்வது இக்காலத்துக்கு அவசிய தேவையானமேலான சமூகப் பணியாகும்! சிதம்பரம் முதலிய ஸ்தலங்களில் மதவேறுபாடின்றி யாரும் சென்று தடையின்றி வழிபடக்கூடியதாக வுள்ளது குறிப்பிடத்தக்கது.

0 0 0

அருந்துணையை அடியார்தம் அல்லல்தீர்க்கும் அருமருந்தை அகல்ஞானத் தகத்துள் தோன்றி, வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு வான்புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும், பொருந்தணைமேல் வரும் பயனைப் போக மாற்றிப் பொதுநீக்கித்தனை நினைய வல்லோர்க்கென்றும் பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.

—அப்பர்சுவாமிகள்.

கைதானவர்களில் ஒருவர்

வாக எல்லாடிப்போக்கிலு முள்ள பஸ்கள் அனைத்தும் நொசரி சேவையிலிடுபடுவதில்லை. பஸ்கள் பழுதடைந்து நாட்கணக்கில்மாதக்கணக்கில் கிடந்து விடுவதுமுண்டு. டிப்போவிலிருந்து புறப்படும் பஸ் தனது சேவையை உரிய நேரத்தில் ஒழுங்காக செய்து முடித்து திரும்பி வந்துசேருமென்றநம்பிக்கை பெரும்பாலும் யாருக்குமே சேர்ந்த இதர ஊழியர்களே திருத்திக்கொள்ளவும் தூண்டுதல் அளிக்கும் நல்ல திட்டம் இது. அபராதமும் தண்டனையும் சாதிக்கமுடியாதவற்றை இத்தூண்டுதல் திட்டம் சாதிக்க முடியும். இ.போ.சபையின் இத்திட்டம் ஈட்டும் வெற்றியில்தான் இதர துறைகளிலும் தூண்டுதல் திட்டம் பரவுவது பெரிதும் தங்கியிருக்கிறது.

உலக அரசியலில் திருப்பம்

பிரஞ்சு அதிபர் பதவியிலிருந்து ஜெனரல் டிகோல் விலகிவிட்டார். அதாவது டிகோல் இல்லாத ஐரோப்பா அமெரிக்காவில் புதியவர் ஒருவர் அதிபராகப் பதவியேற்று சில தினங்கள் தான் சோவியத் யூனியனுக்கு ஆசியாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் புதிய புதிய பிரச்னைகள் தோன்றியிருக்கின்றன. சீனாவுக்கு உள்நாட்டிலும் வெளியிலும் பிரச்னைகள் பிரிட்டனில் வில்சனின் தொழிற்கட்சி அரசாங்கம் நித்தியகண்டம் பூரண ஆயுசு என்ற நிலையிலிருக்கிறது. இது ஓரளவுக்கு நல்லதென்றே தோன்றிகிறது. காரணம் வல்லரசுகளும் அவற்றின் தலைவர்களும் பழைய பாதைகளை விட்டு முற்றாக விலகி விட்டாலும் புதியமுறையில் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றனர் பிரான்சில் டிகோலின் பின் புதிய இயக்கம் ஒன்று தொடங்குவதற்கான அறிகுறிகளும் புதிய அதிபருடன் அமெரிக்காவின் புதிய நிர்வாகம் ஆரம்பமாவதற்கானஅறிகுறிகளும் தென்படுவதுடன் சோவியத் யூனியனில் இம்முறை மேதினக் கொண்டாட்டத்தில் ஏவுகணைகள் முதலியவற்றுக்குப் பதிலாக நடனமும் பேச்சுக்களும் முக்கிய இடம் பெற்றிருப்பதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இவ்வருட மகாநாட்டில் அமெரிக்கா மீதான தாக்குதல் குறைந்து ரஷ்யா மீது தாக்குதல் நடந்திருப்பதும் வல்லரசுத் தலைவர்களின் சிந்தனையிலும் போக்கிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் குறிப்பிடத் தக்க அம்சங்கள் உலகில் என்றுமே நிரந்தரமான அமைதி நிலவியதில்லை.

நாடுகளுக்கிடையிலும் சரி மக்களுக்கிடையிலும் சரி எப்போதுமே கருத்து வேறுபாடு ஏற்படாமல் ஐக்கியம்நிலவியதுமில்லை. அமைதியும் ஐக்கியமும் நிரந்தரமாக உலகில்என்றும் நிலவும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

சுழலும் உலகிலே இன்பமும் துன்பமும் உறவும் பகையும் சண்டையும் சமாதானமும் மாறிமாறி ஏற்படுவது இயல்பு. ஆனால் அழிவுக்கான ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும் அதிகாரத்தை நிலைநாட்டுவதிலும் ஒரே போக்கைப் பின்பற்றி வருவதால் யாருக்கும் நன்மையில்லை.

இப்பொழுது வல்லரசுத் தலைவர்கள் தமது பழைய பாதைகள் எந்த அளவுக்கு நன்மை செய்திருக்கின்றன என்பதையும் தாங்கள் பின்பற்றிவந்த கொள்கைகள் எந்த அளவுக்கு வெற்றியீட்டித்தந்துள்ளன என்பதையும் தங்களைத் தாங்களே கேட்டு ஆராயவும் ஆத்மசோதனை செய்துகொள்ளமுன் வந்திருக்கின்றன,

நியூயோர்க் டைம்ஸ் செய்திச் சேவையைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் ரெஸ்டன் சமீபத்தில் எழுதியிருப்பது பால வல்லரசுத் தலைவர்கள் தங்கள் கொள்கைகள் செயல்கள் பற்றி தங்களுக்குள்ளேயே கேள்வி கேட்கவும்ஆத்மசோதனை செய்து கொள்ளவும் ஆரம்பித்திருப்பது அறிவு வளர்ச்சியின் அறிகுறி.

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மேமாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யையும் விஸ்தரிப்பதாக முடிவுசெய்துள்ளனர் எல்லையை விஸ்தரிப்பதனால், சங்கத்தின் முன்னைய எல்லைக்கு அருகாமையில் உள்ள பெரியகுளம், விவசாய கலாசார அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாகத்தினுள் அடங்கியுள்ள 428 இரண்டு ஏக்கர் காணிகளும் இச்சங்கத்தின் நிர்வாகத்தினுள் அமையும்.

0 0 0

நோயாளிகள் கஷ்டம்

திருகோணமலை அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளிகள் மிதமிஞ்சிப்படுக்க இடமின்றி பலவிதமான கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். ஜுரத்தினால் பீடிக்கப்பட்ட இந்நோயாளிகளுக்கு வேண்டியஉதவிகளைச் செய்ய சங்காணிமார்களும் இல்லை. அவர்களும் ஜுரத்தினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

0 0 0

பொலிஸார் புலன்விசாரணை

மூன்றுமாதக் குழந்தையைக் கொன்றதாகச் சந்தேகிக்கப்படும் ஒருதாய், பொலிஸ்காவலில் வைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் பலத்ஹேகப்பிட்டியாவிலுள்ள வீவல தோட்டத்தில் நடந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணை செய்கின்றனர்.

0 0 0

சீமெந்து உற்பத்தி

காலிக் கட்டுகொடை என்னும் இடத்திலுள்ள நுகுணை சீமெந்துத்தொழிற்சாலையின் சீமெந்து உற்பத்தியில் அரிய சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் 5000 தொன் சீமெந்து மூடைகள் உற்பத்தி செய்யப்படவேண்டியதற்குப் பதிலாக 11,000 தொன் சீமெந்து மூடைகள் உற்பத்திசெய்யப்பட்டன.

0 0 0

முஸ்லிம்கள் கஷ்டம்

பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பாளை, அங்காவில், திவிளானை, கல்லால, மன்னம்பிட்டி, கொளக்கானுவெளி. நுகாதமனை ஆகிய பழைய கிராமங்களுக்கப்பால் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள குடியேற்றத் திட்டங்கள், மேற்குறிக்கப்பட்ட முஸ்லிம் கிராம முன்னேற்றத்திற்கு மிகத் தடையாக இருப்பதாக முஸ்லிம் சங்கங்கள் தெரிவித்துள்ளனவாம்.

ஏற்றுக்கொண்டு விட்டால் பிரச்னை தீர்ந்துபோகும்.

இதை நான் உதாரணமாகச் சொன்னதன் கருத்து கிராமங்கள் கிராமங்களாமானால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குடும்பம்போல் வாழ்க்கையில் இதையும் இதே போன்ற பிறபிரச்னைகளையும் எப்படி எளிதில் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதைக் காட்டுவதுதான். இதை ஆசிரமங்கள் அமைத்துச் செய்வது சாத்தியமல்ல. ஒவ்வொரு கிராமத்திலும் இதைச் செய்தால்தான் இந்தப் பிரச்னை தீரும்

இதேபோல கிராமத்தின் விளைச்சலைப் பெருக்க வேண்டியிருக்கிறது. கிராமத்திலுள்ள விவசாயிகள் எல்லாம் அவரவர் தம் வேலையைப் பார்த்துக் கொண்டும் கூலியாட்களுக்கும் முதலாளிகளுக்கும் தொடர்பே இல்லாமலும் இருந்தால் உற்பத்தி பெருக்குவதற்கு வழி ஏது? உற்பத்தி பெருகவேண்டுமானால் கிராமத்திலுள்ள கூலியாட்கள், நிலமுதலாளிகள், தனவான்கள் ஆகிய மூன்று வகையினரும் ஒத்துழைக்க வேண்டும். நான் தனவந்தர்களிடம்அவர்களும்கிராமதான கிராமத்திற்குப் பெரிதும் உதவவேண்டும் என்பேர் வேண்டுமென்று சொல்லவில்லை. இப்பொழுதைக்கு ஒரு மாவட்டத்திற்கு எனக்கு 1000 ஊழியர்கள் கிடைத்தால் போதும். இதேவகையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 1000 ஊழியர்கள் வீதம் நாடு முழுவதிலும் கிடைத்தால் புரட்சிக் காரியம் உடனே நடந்தேறி விடும்.

நான் ஒரு சமயம் ராஜேந்திர பாபுவிடம் பேசுகையில் இதே விஷயத்தைச் சொன்னேன். இதைக் கேட்ட அவர் இதற்கு நானே உதாரணம். என் குடும்பத்தார் என் பொறுப்பை ஏற்றுக்கொண்டு குடும்பக்கவலையே எனக்கு இல்லாமல் செய்தார்கள். ஆகையால் தான் என்னால் நாட்டின் தொண்டில் இறங்சமுடிந்தது என்று சொல்லி நான் கூறிய யோசனையை ஏற்றுக்கொண்டார் அவர் எனது முயற்சியை முழுவதும் ஆதரித்தார். இது ஒரு பெரிய சமுதாயப் புரட்சிகான முயற்சி; இது நடந்தேறவேண்டும் என்று விரும்பினார்.

ஆசிரியருக்கு கடிதம்

ப.ச தலைவர் விளக்கம்

தங்களின் 7-5-69 ம்திகதி ஈழநாட்டில் முதல் பக்கத்தில் காரியதரிசி அறிக்கை பிழையானது என்றதலைப்பில் பிரசுரமான செய்தி பற்றி சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

மின்சார இணைப்பு கொடுப்பதற்கு தொழிலாளர் தேவையென நான் சபைக்கு சுட்டிக் காட்டியதன் பெயரில் சபை தேவையான தொழிலாளர்களை நியமனம் செய்ய ஏகமனதாகஎனக்குஅதிகாரம் வழங்கியது உண்மையானதென திரு. க. தவஞானம் 6-ம் வட்டார அங்கத்தவர் பிரேரிக்க திரு க. குலசிங்கம்4ம் வட்டார அங்கத்தவர் ஆமோதித்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதால் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது, இத்தருணத்தில் சென்றகூட்டத்துக்கு சமூகம் கொடுக்காதவர்கள் வாக்களிக்கலாமா என்ற சட்டப் பிரச்னையால் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் முடிவு வரும்வரை கூட்டம் ஒத்தி வைக்கப்படவேண்டுமென சபை தீர்மானித்ததன் பெயரில் சபை கலைந்தது

க. பத்மராசா
தலைவர்
பட்டினசபைகாரியாலயம்
உரும்பராய் ஊரெழு
உரும்பராய்.

தயை என்ற மூன்றையுமே நீங்கள் இப்போது இதம்முகவேலைத் திட்டத்தின் மூலம் கடைப்பிடிக்கச் சொல்லி வடுகிறீர்கள்.

இந்த வேலைத்திட்டத்தை எவராலும் புறக்கணிக்க முடியப்போவதில்லை. தயையும் விடுவதற்கில்லை, தமக்தையோ, தானத்தையோ ஒதுக்குவதற்குமில்லை இவற்றில எதையுமே விடுவதற்கில்லையென்று நான்எண்ணலானேன். எனவேநான்சூட்சுமத்தில் புகுந்துவிட்டாலும் நண்பர் கூறியுள்ளபடிதமத்தையும் தானத்தையும்தயையையும்குறிக்கும்வேலைத்திட்டத்துடன் என் உள்ளம் இணைந்தேதான் இருந்து வரும்,

— —

கருத்தரங்கு

சுழிபுரம், சனி

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூக வாசிகசாலை மண்டபத்தில் நிலையத் தலைவர் திரு, மு.சிவராசா தலைமையில் இலக்கிய கருத்தரங்கு நடைபெற்றது. சிறப்புரையாளராக பண்டிதர் ப. இராசகுரு கலந்து கொண்டு கருத்துரை வழங்னர்.

இ-போ-ச ஊழியர்க்கு பரிசுவழங்கும் திட்டம்

கோட்டை, சனி

36 ஆயிரம் இ.போ.ச. ஊழியருக்கு மேதினப் பரிசு கிடைப்பதற்குத் தேசிய சேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசா திட்டம் ஒன்று வகுத்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்படி முதல் பரிசு பெறும் ஒவ்வொரு டிப்போவையும் சேர்ந்த ஊழியர்களுக்கு 50 ரூபாயும், இரண்டாவது பரிசுபெறும் ஊழியர்களுக்கு 25 ரூபாயும், மூன்றுவது பரிசுபெறும் ஊழியர்களுக்கு 10 ரூபாயும் வழங்கப்படும்.

சாரதிகளின் வாகனப் பாவனை, விபத்துப் போன்றவற்றையும் கண்டக்டர்கள் நடவடிக்கைகளையும் கவனித்துப் புள்ளிகள் அளித்து அதன் மூலம் இந்தப் பரிசுகள் வழங்கப்படும்.

பொதுமக்களும் இத்திட்டத்தில் பங்குபற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மரண அறிவித்தல்

இராமலிங்கம் இராசையா

கொக்குவில் கிழக்கு **இராமலிங்கம் இராசையா** காலமாகிவிட்டார். கந்தையா அதிபர் நாவற்குழி மகாவித்தியாலயம், செல்வராசா ஆசிரியர், ஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில் மேற்கு, செல்லையா வருமானவரி இலாகா கொழும்பு, இராசதுரை லூயிஸ் பிறவுண் அன்கோ கொழும்பு, துரைசிங்கம் தேசிய வீடமைப்புத்திட்டம் அனுராதபுரம், திருமதி வேலாயுதபிள்ளை பாக்கியம் ஆகியோரின் தந்தையாரும், சி. பொ. வேலாயுதபிள்ளை, அதிபர், இராமகிருஷ்ணஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், அவர்களின் மாமனாருமாவர். ஈமக்கிரிகை இன்று மாலை 2 மணிக்கு நடைபெறும்.

கருணகிரி
செம்பியன் ஒழுங்கை
கொக்குவில்

1412

கைதானவர்களில் ஒருவர் காசு கொடுத்தாராம்

வலவெட்டித்துறை, சனி

இயக்கச்சி இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து சார்ஜண்ட் பி. ஏச். பேபிசிங்கோ தலைமையில சென்ற இராணுவக் கோஷ்டியொன்று குடத்தனை கடற்கரையில வைத்துகள்ளக்கடத்தலில ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில ஐ. தணேசு, இ. இராசதுரை, ஐ. சிறில, சி. மரியதாஸ், சி. இரத்தினம் ஆகியோரைக் கைது செய்தனர்.

அப்போது அதில் ஒருவர் தன்னிடம் இருந்த பணத்தில் 350 ரூபாவைக் கொடுத்து தங்களை விட்டுவிடுமாறு கேட்டுக்கொண்டாராம்,

உடனே இராணுவத்தினர் கைது செய்தவர்களையும், பணத்தையும் படுத்தித்துறை பொலிஸ்நிலையத்தில ஒப்படைத்தனர்.

இதைத் தொடர்ந்து பொலிசார் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில அவர்களை ஆஜர் செய்தபோது மாஜிஸ்டிரேட் வழக்கை விசாரணை செய்வதற்காக இம்மாதம் 20-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ரயிலிலிருந்து குதித்து பெண் மரணம்

கோட்டை, சனி

வியாங்கொடைக்கு அருகில் ஓடிக்கொண்டிருந்த ரயிலிலிருந்து ஓர் இளம்பெண் குதித்துமரணமானார். சுமார் 30 வயது மதிக்கத்தக்க இப்பெண்ணை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு வியாங்கொடை பொலிஸார் முயற்சியெடுத்துவருகின்றனர்.

பஸ்கண்டக்டர் தற்காலிக வேலை நீக்கம்

நல்லூர் சனி

யாழ்ப்பாணம் இ.போ.ச. பஸ் டிப்போவைச் சேர்ந்த பஸ் கண்டக்டர் பி. நவரத்தினம் என்பவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் 3-5-69 இரவு இ.போ.ச. டிப்போ சுப்பிரிண்டன் ஒருவரின் உத்தரவை மீறிய துடன் அவருடன் மரியாதைக்குறைவாக நடந்து கொண்டதைத் தொடர்ந்தே வடபிரதேச இ. போ. ச. முகாமையாளரால் இவர் தற்காலிகவேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

யாழ். மின்சாரநிலைய ஊழியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மின்சார நிலையஊழியர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்க செயலாளர் திரு. ஆர். செல்லையாவுடன் யாழ்ப்பாணம் மேயர் திரு. எஸ். நாகராசா இம்மாதம் 15-ம் தேதி காலை பேச்சுவார்த்தை நடத்துவார்.

இம்மாதம் 17-ம் தேதி யாழ்ப்பாணம் மின்சார நிலையத்தைச்சேர்ந்த சகல ஊழியர்களும் வேலைநிறுத்தம் செய்வதென ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன ஊழியர் சங்க யாழ். கிளையின் அவசரக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தாய்ச்சங்கம் பெப்ரவரி 13-ம் திகதி அனுப்பிய கடிதத்துக்கும் அதன்பின் அனுப்பப்பட்ட கடிதங்களுக்கும், இதுவரை மாநகர சபை நடவடிக்கை எடுக்காததியால் வேலைநிறுத்தம் செய்வதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேயர் கோரிக்கைகள் சம்பந்தமாக இம்மாதம் 15-ம் திகதி காலை தன்னை சந்திக்கும்படி சங்க செயலாளர் திரு. ஆர். செல்லையாவிற்கு அறிவித்திருப்பதாக அறியப்படுகிறது

தொழில் நுட்ப....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களசட்டத்தால் வேலையிழந்த அரசாங்க ஊழியர் சங்க செயலாளர் திரு.எம். மகாலிங்கம் இவ்விஷயமாக யாழ்ப்பாண எம்.பி.யுடன் தொடர்பு கொண்டதை தொடர்ந்தே திரு.ஜி.ஜி. பொன்னம்பலம்,இக்கடிதத்தை கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org